திராவிடநாடு

16-12-62 | வாரவெளியீடு | விலை 16 காசு

பகைமை வெல்வோம்!

—[கொ. ப. இராமசாமி]—

நமதுரிமை தனைக்கொள்ள நாட்டைக் கொள்ள
நயவஞ்ச கச்சீனன் படைதி ரட்டி
இமயத்தின் மேலேறி எல்லை தாண்டி
இம்மண்ணைத் தனதாக்கப் புகுந்தே விட்ட
சமயத்தில் நாமுறங்கிப் போனோ மென்றால்
சாய்ந்துபடும் மக்களுயர் ஆட்சி கண்டீர்!
அமைதியினி வெல்லாது; அடிமை யாக்கும்,
அரவமெனச் சீறியெழுந் துயிரைத் தாரீர்!

வாளெடுத்து விளையாடும் மறவர் கூட்டம்
தோள்புடைத்து நிற்குதடா தெற்கே; சீனன்
தாளெடுத்து வைக்கவினிச் சாவான்; கொண்ட
தாக்குதலைக் கைவிட்டுப் போவான்; வெற்றி
நாளடுத்து வருகின்ற சேதி; நம்மின்
நாட்டுரிமை தனைக்காத்த நீதி; என்று
ஆளத்து வந்திடுவார் சொல்வார்; கேட்டு
அகமகிழ்ந்து நின்றிடுவோம்; பகைமை வெல்வோம்!

பாரதியும்—
சமுதாய சீர்திருத்தமும்!

—[குழலோன்]—

1882 டிசம்பர் மாதம், 11-ம் நாள் தமிழ் நாட்டின் ஒரு ஒளிச் சுடர் பிறந்தது. ஆம்! பாரதி பிறந்தார். அந்நல்லவரின், உணர்ச்சிக் கவியின், பிறந்த தினத்தை இவ்வருடம் அரசினரே கொண்டாட முன் வந்துள்ளனர்.

சென்னையில் மூன்று நாட்கள், அவ்வீரக்கவியின்நினைவைப்பகிர்ந்து கொள்ள, பெரிய பெரிய தமிழறிஞர்களெல்லாம் முன் வந்துள்ளனர். மகிழ்ச்சிக்குரிய செய்தி! அது, தமிழ் மொழிக்கு நாம் செய்யும், வணக்கத்தின் ஒரு சிறு பங்கு!

பாரதி, ஒரு உணர்ச்சிக் குவியல்! வீர வெந்தழல்! ஒன்பது வகையான உள்ளச் சுவைகளுக்கும், ஒரு எடுத்துக்காட்டு. அவர் வார்த்தைகளில் சோகம் இழையோடினால், நம் கண்கள் நீரால் நனைகிறது. வீரம் தெறித்தால், கண்கள் செவ்வரி படர, உடலில் ஒரு துடிதுடிப்பு! மகிழ்ச்சி வரிகள் நம் வாய் வழி நுழைந்து மனம் அடைந்தால், ஒரு துள்ளல் நம் இதயத்தில்! இம்மாதிரி உணர்ச்சிகளுக்கு, எழுத்தால் உயிர்கொடுப்போர் சிலரே! அதில் முழு வெற்றி பெற்ற சிலருள் முதன்மையானவர் பாரதி!

பாரதி நம் மனதில், சிறு வயதில்—அறிமுகப்படுத்தப்படுவது—

'தாயின் மணிக்கொடி பாரீர்,'......

'ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே!'...

என்ற முறையில்தான். ஆனால், பாரதியின் பெருநோக்கு, வாழ்க்கைக்கு வழிகாட்டும் முறை, எவராலும் பின்பற்றக் கூடிய, எளிய, அதேபோது நிச்சயமான முறையாகிறது.

பாரதியைப்போல், அக்காலத்திலேயே துணிந்த, அஞ்சாநெஞ்சுடைய சமுதாய சீர்திருத்தவாதி இருந்தது வியப்புக்குரியதே!

அவர் பாடல்களில் புதைந்துகிடக்கும் சமுதாய சீர்திருத்த நறுமணம் இந்நாள்வரை நாம் முழுமையாக உணர்ந்தோமா என்பதே ஐயத்திற்குரியதாகும். அதை எடுத்தியம்பக் காலமும் போதாது; காகிதமும் போதாது!

சாதியின் பெயரால், மக்களின் ஒற்றுமையைக் குலைத்து, மனமாச்சரியங்களை உண்டாக்கிப், பலரை வஞ்சித்து வாழும் ஒரு சிலரின் நச்சு வாழ்க்கை அவர் கண்களில் கோபத்தீயாகச் சுடர்விட, வார்த்தைகள் எனும் எரிகுண்டுகளால் தாக்குகிறார்:

'மனிதரில் ஆயிரம் ஜாதி—என்ற
வஞ்சகர் வார்த்தையை ஒப்புவதில்லை.'

ஆயிரம் ஜாதிகள்கூறி, ஆண்டவன் பெயரால்அராசகம் நடக்கும் நாளில், மூடநம்பிக்கைகளுக்கு முழுமூச்சாக உயிரூட்ட முனைந்த 'பெரிய மனிதர்கள்' நிறைந்த அந்நாளில்,இவ்வளவு துணிவுடன் அழுத்தந்திருத்தமாக, ஆணித்திறமாக யார் புகன்றார்கள்—பாரதியைத் தவிர!

ஐவருக்கும் நாயகி, அழியாத பத்தினி, குரங்கு கடலினைக் கடந்தது போன்ற இல்லாத பொருள் கூறி, பகுத்தறிவுக்கு ஒவ்வாத கதைகள்கூறி, அன்றாட வாழ்க்கைக்கு அல்லல்பட்டு நொந்த ஏழையின், பலவீனமான இதயத்தை, வறுமையால் கோழைகளான மக்களின் மனதில், விடம்தூவி, ஏமாற்றும் எத்தர்களின் ஆயுதமான புராணங்களுக்கு அவர் வைக்கும் வேட்டு,

'கடலினைத் தாவும் குரங்கும்—வெங்
கனலிற் பிறந்ததொரு செவ்விதழ்ப்
பெண்ணும்,
வடமலை தாழ்ந்ததனாலே—தெற்கில்
வந்து சமன் செய்யும் குட்டைமுனியும்
நதியினுள்ளே மூழ்கிப் போய்—அந்த
நாகர் உலகிலோர் பாம்பின் மகளை
விதியுறவே மணம் செய்த—திறல்
வீமன் கற்பனை என்பது கண்டோம்!'

என்றார். அவரே 'பாஞ்சாலி சபதம்' எழுதியுள்ளாரே? என வினா எழும்பலாம் மனதில். அதற்கும் அவரே பதில் உரைக்கின்றார்.

'நன்று புராணங்கள் செய்தார்—அதில்
நல்ல கவிதை பல்பல தந்தார்
கவிதை மிக நல்லதேனும்—அக்
கதைகள் பொய்யென்று தெளிவுறக்
கண்டோம்;
புவிதனில் வாழ்நெறி காட்டி—நன்மை
போதிக்கும் கட்டுக்கதைகள்அவைதாம்,

அருமையான விளக்கம்!

சாத்திரங்கள் செய்தார். அவற்றில் பொருளற்றகட்டுப்பாடுகள் விதித்து, வாழும் மனித உயிர்களின் நிலை கேவலமாக்க, மனதில், வேற்றுமைகள், உயர்வு தாழ்வு மனப்பான்மைகள் எனும் கள்ளி காளான்கள் முளைவிட வைத்தனர். அவர்களைக் காணும்போது, அச்சாத்திரங்களின் பொருளற்ற விதிகளைக் கண்டபோது குமுறிய உள்ளம், எழுப்பிய அவலக் குரல், தவறு! ஆவேசக் குரல்—

'சூத்திரனுக் கொருநீதி—தண்ட
சோறுண்ணும் பார்ப்புக்கு வேறொருநீதி;
சாத்திரம் சொல்லிடுமாயின்—அது
சாத்திரமன்று சதியென்று கண்டோம்.

யார் கூறினார்கள் இவ்வளவு மனம் நொந்து! எதுவாயினும், உண்மையைக் கூறும் மனஉறுதி உண்டாயிருப்பதால் கூறமுடிந்தது பாரதியால்.

ஆனால், அன்றைய, இன்றைய உலகம் இதை எடுததுக்கொண்டதா? சுதந்திர கீதத்தை மட்டும் எடுத்துக்கொண்ட பெரியவர்கள், பாரதியின் இக்கூற்றை எடுத்துக் கொண்டார்களா? ஏன் இல்லை? அந்தக் கேள்விக் குறி அன்றே எழுந்திருந்தால், ஒரு உண்மைக் கவியின், வீர உள்ளம் உலகெங்கும் மணம் பரப்பி இருக்குமே?

இதே பராதியார், நாட்டுப்பாடல்கள், சுதந்திரகீதங்கள் இயற்றாமல், இம்மாதிரி உயரிய குறிக்கோளுடன் பாடி முடித்திருந்தால், நாட்டுக்கு அறிமுகப்படுத்தப்பட்டிருப்பாரா அந்நாளில்? என்பதே ஐயத்திற்குரியதுதான்!

பாரதியின் சமுதாய சீர்திருத்தத்திற்காக எழுந்த உணர்ச்சி வரிகள் படிக்கும்தோறும், நம் இதயம் எழுப்பும் பேரொலி, வீர உணர்ச்சியால், இரத்த நாளங்கள் சூடேறுவதும் உணர்ந்தால், உண்மையில் அவர் கவிஞர் மட்டுமல்ல...கலை உள்ளம்

(4-ம் பக்கம் பார்க்க)

திரை மறைவில் சமாதானமா?

ṙ 21] ஆண்டு சந்தா ரூ. 8 (16—12—62) தனிப்பிரதி 16 காசு [இதழ் 16

பிடித்த இடங்களைப் பிடித்தபடி

பிதற்றுகிறன் சமாதானமென்று!

★

எடுத்தடி அப்பால் வைக்க ஏனே தயங்குகிறன்!

★

சீனக்காரன்என்றுலே சிக்கல்(Puzzle)மிக்கவன் என்றெரு பழமொழி உண்டு

★

தான் என்ன செய்கிறேன் என்று தனக்கே தெரியாத தடுமாற்றக்காரன்

★

எதிலும் குழப்பம்! எப்பொழுதும் குழப்பம்!!

★

எனவேதான், நாடு பிடிக்கும் ஆசையால் தனக்கே
கேடு தேடிக்கொள்கிறன்

★

குக்கல் உணவினனுக்குக் குழப்பம் உடன்பிறப்புப் போலும்!!

★

எனவேதான், போர் நிறுத்தமும் போர்ப் பிரகடனமும்
ஒரே சமயத்தில் நடைபெற வழிவகுக்கிறன்!

★

போர் நிறுத்தம் என்று அறிவித்த பின்னரும் நமது வீரர்களைச்

சுட்டுக் கொல்கிறன் கொடியவன்

★

வெளியே சமாதானப் பேச்சு! திரைமறைவில் போருக்கான ஆயத்தங்கள்!!

★

எனவே, நமது போர் முறைகள் மேலும் வலுப்பெற வேண்டும்,
பொருளும் நிறையத் தரப்பட வேண்டும்.

★

வெற்றி நமதே

2-ம் பக்கத் தொடர்ச்சி

கொண்டவர் மட்டுமல்ல! நல்லதொரு சமுதாய எழுச்சிக்கு அடி கோலிய வீரர்!

"சுடுதலும் குளிர்தலும் உயிர்க்கில்லை,
சோர்வு வீழ்ச்சிகள் தொண்டருக்கில்லை,
எடுமினோ, அறப்போரினை!"—

காந்தியார் கூற்றாகக் கூறும் அவ்வரிகளில் வீரம் மட்டுமா இருக்கிறது? விவேகமுமல்லவா ஊடே இணைந்திழைகிறது!

மக்களின் மனம் வளரா நிலையை எடுத்தியம்பும் முறையே தனி! மற்றவர் எழுதும்போது, ஏதோ அவர்கள், 'எல்லாம்' தேர்ந்ததுபோலவும், மற்றவர்களெல்லாம் மதியிலிகள் போலவும், சுட்டிக்காட்டுவர். ஆனால் பாரதி? உள்ளம் வெதும்புகிறான். தன்னுடன் இருக்கும், தன் உயிரில் கலந்தவர்கள் படும் துன்பத்தைத் தான் அனுபவிப்பதாக உணர்கிறான். அதனால், அவன் இதயம் அழும் அவல ஒலி, சோக முத்திரை, ஒவ்வொரு சொற்களிலும் தெரிக்கிறது. சுவைக்க ஒன்றா? இரண்டா?

நெஞ்சு பொறுக்குதில்லையே—இந்த
நிலைகெட்ட மனிதரை நினைந்துவிட்டால்,
அஞ்சியஞ்சி சாவார்—இவர்
அஞ்சாத பொருளில்லை அவனியிலே.

என்று தொடங்கும் பாடல், இன்றைய இளம் உள்ளங்களுக்கு, ஒவ்வொரு வகுப்பிலும் பாடமாகவைக்க வேண்டிய கருத்துக் கருவூலம். எதிர்கால சமுதாயசிற்பிகள் சமைக்கப்போகும் அழகான வாழ்க்கை மாளிகை, இக்கவிதைக் கருத்துக்களால் இழைக்கப்பட்ட இலட்சிய மாளிகையாகவேண்டும்! நிச்சயம், இவ்வாற்றாமையால் எழுந்த சோக, அதேபோது அழுத்தந் திருத்தமான வரிகள், எதிர்கால சமுதாயத்தை ஒரு இலட்சிய சமுதாயமாக, வீர நெஞ்சுடைய செய்கை வீரர்களாக்கும் தகுதியைத் தன்னகத்தே படைத்ததே!

'கொஞ்சமோ பிரிவினைகள்—ஒரு
கோடி என்றால் அது பெரிதாமோ?
ஐந்துதலை பாம்பென்பான்—அப்பன்
ஆறுதலையென்று மகன் சொல்லிவிட்டால்
நெஞ்சு பிரிந்திடுவார்—பின்பு
நெடுநாள் இருவரும் பகைத்திருப்பார்.'

வேடிக்கையும் வேதனையும் கலந்த இந்த வரிகளின் உண்மையை எங்கும் காணத்தானே செய்கிறோம்!

கலையுள்ளம்கொண்ட அக்கவியின் மனதில், பெண்மை, அவர் கண்ட பெண்களின் உருவில், இலட்சியத்தில் மின்னுகிறது. இடியிடிக்கும் வானம், பயங்கர மின்னல் வெட்டும்வானம், மோனப்புன்னகை புரிய, வெண்மேகங்கள் தவழ, திங்களின் ஒளியுடன் சுடர்விடும்போது எத்துணை அழகின் பொருளை விளக்குகிறது. அவ்வாறே, மூட நம்பிக்கைகளை நாசமாக்க எழுந்த வீர உணர்ச்சி, பயங்கர எண்ணச்சுழல்களின் தெரிப்பு நிறைந்த அந்த இதயத்தில், மோன நிலவின் கலையுணர்வும் மண்டிக்கிடக்கத்தான் செய்கிறது. கவியுள்ளத்தின் மேன்மையும் ஒளிவிட்டுத்தான் நிற்கிறது.

'ஆணும் பெண்ணும் நிகரென கொள்வதால்
அறிவிலோங்கி இவ்வையம் தழைக்குமாம்'
நாணும், அச்சமும் நாய்கட்கு வேண்டுமாம்;
ஞான நல்லறம், வீர சுதந்திரம்
பேணு நற்குடிப் பெண்ணின்
குணங்களாம்.'

நிமிர்ந்த நன்னடை,
நேர்கொண்டபார்வையும்,
நிலத்தில் யார்க்கும் அஞ்சாதநெறிகளும்
திமிர்ந்தஞானச் செருக்கும் இருப்பதால்
செம்மை மாதர் திறம்பு வதில்லையாம்.

என்று, பலரனைய பெண்ணுக்கு இலக்கணம் வகுத்து, துணிந்த மனதின் நல்லெண்ணம் வாழ்க்கையின் வெற்றி! என்ற அவ்வரிகளில்தான் எத்துணை அழகு! ஆணித்திறமான அறிவுரை கூறுகிறார்:

'மூத்த பொய்மைகள் யாவும்
அழிப்பராம்;
மூடக்கட்டுகள் யாவும் தகர்ப்பராம்.

இலட்சியக் கவியின் ஒவ்வொரு வரிகளும் பொன்னேட்டில் பொறிக்கப்படவேண்டியவைகளே! ஆனால் அதையார் நுகர்ந்தார்கள்? உணர்ந்தவர்கள் யார்? 'ஏதோ நாட்டின் சுதந்திரத்திற்காக பாடினார் பாரதியார்' என்ற முறையில் அவர் பெயர் நம்மில் உலாவந்ததே தவிர, வாழ்வியலில், எதிர்கால சமுதாயத்தை சமன் செய்வதில்கொண்ட பங்கு விளக்கப்பட்டதா? ஏன்? அதை மட்டும் அவர் எழுதியிருந்தால் இருட்டடைப்புச் செய்யப்பட்டிருப்பார்—சமுதாயத்தை நாசப்பாதைக்கு அழைத்துச்செல்பவர் என்ற முறையில் — 'நாத்திகன்' என்ற பட்டப் பெயருடன்; விட்டுவிடப்பட்டிருப்பார். ஆனால், தமிழ் விளைத்த நற்பயன், நல்ல கவிஞர் ஒருவர், நம் அகக்கண்ணைத் திறந்து ஆயிரம் நல்லது கூறியிருப்பின் எடுத்துக் கொள்ளுவதுதானே அறிவுடைமை!

'ஜாதி நூறு சொல்லுவாய், போ, போ,
போ,
தரும மொன்றியற்றிலாய் போ, போ,
போ,
நீதிநூறு சொல்லுவாய், காசொன்று
நீட்டினால் வணங்குவாய் போ, போ, போ'

அந்தப் 'போ, போ' என்று கூறும் வார்த்தைகளில்தான் எத்துணை அருவருப்பு, வேதனை இழையோடுகிறது. உள்ளத்து உணர்ச்சிக்கு மதிப்பளித்து, அத்துடன் இணைந்து, வாழ்ந்த அந்தக் கவிஞனின் வார்த்தைகள் நினைத்தால் நெஞ்சினிக்கிறது! நவின்றால் நாவினிக்கிறது!

இன்றைய நம் நாட்டின் நிலையை அன்றே உணர்ந்தாரோ, என்னவோ, ஒரு விதி சமைத்தார்.

'இனியொரு விதி செய்வோம்—அதை
எந்நாளும் காப்போம்
தனியொருவனுக்குணவில்லை யெனில்
சகத்தினை அழித்திடுவோம்'

என்ன அழகான, உறுதியான வார்த்தைகள். நெஞ்சின் அடித்தளத்தில் எழும் ஆற்றாமையின் விளைவால் எழும் ஓலம், மக்களின் நிலைபுரிந்த அவரின் உணர்ச்சிக் குமுறல்.

இவ்வாறு பாரதியாரின் சமுதாய சீர்திருத்தத்தை நோக்குங்கால், காலம் நமக்கு உதவாது. அவ்வளவு உள்ளது.........!

'இன்னருங் கனிச்சோலைகள் செய்தல்,
இனிய நீர்த் தண் சுனைகள் இயற்றல்,
அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம் பதினாயிரம் நாட்டல்,
பின்னருள்ள தருமங்கள் யாவும்
பெயர் விளங்கி யொளிர நிறுத்தல்,
அன்ன யாவினும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக் கெழுத்தறிவித்தல்'

இந்த பெரு நோக்குக் காண்கின், அவர் தாள்களில் ஆயிரம் முறை விழுந்தெழலாம் போன்ற ஒரு உணர்ச்சி வெள்ளம், நம் உள்ளத்தே எழல் காண்கிறோமன்றோ!

சமுதாயக் கட்டுப்பாடுகளும், மூடப் பழக்க வழக்கங்களும், நம்மை ஏமாற்றி, வாழ்வின் தோல்வியைத் தழுவ வழி காட்டுகிறது, நல்ல மனதையும் கோழையாக்குகிறது என்று புரிய வைக்கும் வரி

(16-ம் பக்கம் பார்க்க)

தலைவியின் பண்பு!

[மா. தருமராசன்]

மயக்கம் தரும் மாலை நேரம்!

அது ஒரு சோலை! தென்னையும், பனையும் கூட்டங் கூட்டமாக நிற்கின்றன. தீம்பலாவைத் தரும் மரங்களும், மாங்கனியைத் தரும் மரங்களும், அவைகளின் மணத்தை அங்கே பரப்பிக்கொண்டிருக்கின்றன. மல்லிகையும், முல்லையும், பிறவும் பூத்துக் குலுங்கிய வண்ணமுள்ளது.

ஆம்... அங்கேஇல்லாத மரங்களே இல்லை! கொடிகளும், செடிகளும் ஏராளம்! சோலையின் நடுவே ஓர் குளம்! பாசி படர்ந்த குளமல்ல—பார்க்கத் தெவிட்டாத அல்லிக்குளம் அங்கே இயற்கை, எழில் என்ற பெயரில் ஆட்சி செய்துகொண்டிருக்கிறது.

அந்த அல்லிக் குளத்தருகே முல்லைச் சிரிப்புதிர்க்கும் மோகன வடிவோடு அவள் கண்கள் சுற்றிலும் சுழன்றபடி இருக்கின்றன.

ஏதேனும் ஓசை கேட்டால்உடனே திரும்பிப் பார்க்கிறாள்—அவள் எதிர்பார்த்தது அங்கில்லாததால் ஏக்கம் கொள்கிறாள். இப்படி அடிக்கடி திரும்பிப் பார்த்து, ஏமாற்றமடைந்ததால் அவளுக்கே சலிப்பேற்பட்டு விடுகிறது. அவள், கன்னத்தில் கரத்தை வைத்து ஊன்றியபடி அல்லிக் குளத்தையே பார்த்துக்கொண்டிருக்கிறாள்.

குவளைமலர் போன்ற அவளது கண்கள் ஏக்கத்தால் வாடிப்போகின்றன. அவளது ஏக்கத்திற்குக் காரணம் என்னவாக இருக்கும்?

கன்னிப் பருவத்தையுடைய அவள்—தன் காதலனைத் தவிர வேறு யாரை இவ்வளவு ஆவலோடு எதிர்பார்ப்பாள்!?

ஆதவன் தன் முகத்தை மேற்கில் புதைத்தபடி இவளது விந்தையான செய்கைகளை, வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்கிறான்!

திடீரென்று அவள் கண்களிரண்டும் பொத்தப்படுகின்றன. திடுக்கிட்டவளாய்த்தன்கண்களைப் பொத்திய கரங்களை விலக்கியபடி—அவள் எழுகிறாள். அவள் எதிரே—அவள் நெஞ்சில் நீங்காத இடம் பெற்று, நிம்மதியின்றி இவ்வளவு நேரம் தவிக்கவிட்ட தலைவன் நின்றுகொண்டிருந்தான்.

இவ்வளவு நேரம் அவளை வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்த ஆதவன் இனிமேல் அவர்கள் ஊடலைக் காணக்கூடாது என்ற பண்போடு மறைந்து விடுகிறான். ஆனால் வெட்கங்கெட்ட நிலவு நங்கை — அவர்களின் விளையாட்டுகளை வேடிக்கை பார்க்க எட்டிப் பார்க்கிறாள்.

தலைவிக்குத் தலைவன்மேல் ஒரே கோபம்! காத்திருந்து காத்திருந்து கண்கள் சோர்ந்துபோக; நினைத்து, நினைத்து நெஞ்சமிழந்து தவித்தவள் அல்லவா? ஆகவே, அவள் தலைவனிடம் ஊடல் கொண்டாள்! அவன் அவளது கோபத்தைத் தீர்க்கப் பல வழிகளில், பலமுறைகளைக் கடைப்பிடித்து முயன்றான்—ஆனால் அவள் கோபம் அதனாலெல்லாம் மறையவில்லை!

'கண்ணே! என் மேல் கோபமா?' அவன் — அவளைப் பரிதாபமாகப் பார்த்தான்.

அவள் கடைசியாகக் கொஞ்சம் கோபம் தணிந்த நிலையில் பேசலானாள்.

"கோபமில்லாமல்—கொண்டாடுவார்களா? ...எவ்வளவு நேரம் உங்களுக்காக இங்கே நான் கால் கடுக்க நிற்பது? சே... இந்த ஆண்கள் மனமே இப்படித்தான்—இரக்கமில்லாதது!"

அவள் கோபம் அவனோடு மட்டும் நிற்கவில்லை; ஆண் குலத்தினர் அனைவரின் மேலும் அது பாய்ந்தது.

தலைவனுக்கும் கோபம் வந்துவிட்டது. 'சிறிது நேரம் தாமதமானதற்கு இந்தக் கோபம் கொள்கிறாளே! இவள் நேற்று நடந்துகொண்டது சரியா?' இப்படியெல்லாம் தனக்குள்ளேயே எண்ணிய தலைவன் அவளை நோக்கி வார்த்தைகளைத் தொடுத்தான்.

"ஹூ...ம்! இதற்கே இவ்வளவு கோபம் கொள்கிறாயே! அப்படியானால் நேற்று நான் உனது இல்லத்திற்கு விருந்தினனாக வந்தபோது —என்னை முற்றிலும் புரியாதவனைப் பார்ப்பதைப்போல் பார்த்து, ஒன்றும் அறியாதவள்போல் நடித்தாயே, அதற்கு நான் எவ்வளவு கோபம் கொள்வேன்? கள்ளி! நேற்று முன்தினம் நாம் ஆடி மகிழ்ந்ததையும், கூடி மகிழ்ந்ததையும், உன் கார்மேகக் கூந்தலிலிருந்த மலர் கசங்கி விழுந்ததையும் மறந்துவிட்டு—நேற்று என்னிடம் நீ நடந்துகொண்டது விந்தையாக இருக்கிறது. புதிய மலரைச் சூடியவுடன் பழைய மலரை மறந்தாய் போலும்!" அவன் அவளிடம் கோபம் கொண்டவன் போல் நடித்தான்.

"இல்லை ...... அத்தான்! நீங்கள் நினைப்பதைப்போல் உங்களை அலட்சியம் செய்யும் நோக்கத்தோடு நான் அப்படி நடந்துகொள்ளவில்லை! புதிதாகச் சாந்து பூசி, நறுமணங் கமழும் எண்ணெய் தடவித் தலைமுடித்த நான், பழகாதவள்போல் நடந்துகொண்டதற்குக் காரணம் உண்டு! நான் அப்படி நடந்துகொள்ளாமல் பழகினால் எனது இல்லத்தில் உள்ளோர் என்மேல் சந்தேகப்படுவார்கள். வெளியார் என்னைப்பற்றி விபரீதமாகப் பேசத் தொடங்கிவிடுவார்கள். இதற்கெல்லாம் பயந்ததினால்தான் நான் ஏதுமறியாதவள்போல் நடந்துகொண்டேன். அன்று நான் நடந்துகொண்டது யாவும் உண்மையல்ல—வெறும் நடிப்பு!" என்றாள் தலைவி!

தலைவனுக்கு அவள் எண்ணம் யாவும் தெரியும், இதயத்தில் உள்ளது என்னவென்று புரியும். ஆகவே, வியப்பேதும் இல்லாது அவள்சொற்களைச் செவிமடுத்தான். தலைவியின் பண்பு அவனுக்கு மகிழ்ச்சியைத் தந்தது. இத்தகைய பண்புகளை உடையவள் தனக்குக் காதலியாக வாய்த்ததை எண்ணி யெண்ணி மகிழ்ந்தான்! ஆனாலும் இன்னும் சிறிது நேரம் அவளைச் சீண்டிவிட்டு வேடிக்கை பார்க்க வேண்டுமென்று விரும்பினான். ஆகவே, அவளதுவார்த்தைகளுக்கு மறுமொழி கூறாதுஅமர்ந்திருந்தான். அவன் இன்னமும் பேசாமலிருப்பதைக் கண்ட தலைவி அருகே நெருங்கி வந்து அமர்ந்தாள்!

"என்மேல் உள்ள கோபம் இன்னும் தீரவில்லையா?" என்றாள், அவன் அதற்கும் பதில் கூறாது—பேசாமலிருந்தான்!

"என்னை மன்னிக்கமாட்டீர்களா? என் வார்த்தையில் உங்களுக்கு நம்பிக்கையில்லையா?" என்றாள் அவள் வருத்தத்தோடு!

தலைவனுக்கு—அவள் முகத்தைப் பார்க்கப்பார்க்கப் பரிதாபமாக இருந்தது. இனிமேலும் இப்படியே நடித்துக்கொண்டிருந்தால் அவள் அழுது விடுவாள் என்று கண்டுகொண்டான். மெல்லப் பேச்சுக்கொடுத்தான்.

"நான் சொல்வதைக் கேட்டாலொழிய—உன்னை நான் மன்னிக்க முடியாது!" என்றான் பிடிவாதமாக!

எப்படியாவது அவன் சம்மதித்தால் போதுமென்று எண்ணிய தலைவி "என்ன வேண்டும்? சொல்லுங்கள் கேட்கிறேன்!" என்றாள். அவன், அவள் உதட்டைக்காட்டிய படி, அவள் காதில் எதையோ முணுமுணுத்தான் குறும்பாகப் பார்த்தபடி!

அதற்குப்பின்—அங்கே இனிமையும், இன்பமும் ஆட்சிசெய்யத் தொடங்கின.

அவர்கள் இருந்த நிலையைக்காண வெட்கப்பட்டு நிலவு நங்கை மேகத்தின் இடையில் ஓடி ஒளிந்து கொண்டாள்.

இந்தக்காட்சிக்குக் கருவாகஉள்ள தலைவியின் பண்பைக் கபிலர் மிக அழகுபடக்குறுந்தொகையில் உள்ள ஒரு பாடலால் விளக்குகிறார்.

இரண்டறி கள்விரும் காதலோளே;
நள்ளென் கங்குல் நம்ஓ ரன்னள்;
கூந்தல் வேய்ந்த விரவுமலர் உதிர்த்துச்
சாந்து உளர் நறுங்கதுப்பு
எண்ணெய் நீவி
அமரா முகத்தள் ஆகித்
தமர்ஓ ரன்னள் வைகறை யானே!

(குறுந்தொகை-312)

"தலைவி, இரண்டு வகைகளில் நடக்கும் தன்மையுடையவள். நள்ளிரவில் நம்முடன் ஒன்றுபட்டவளாக விளங்கினாள். காலை மலர்ந்ததும், கூந்தலில் சூடியிருந்த மலர்களை உதிர்த்துவிட்டு, சாந்தும், நறுமணங் கமழும் எண்ணையும் விட்டுத் தலையைக் கோதி வேறுபட்ட முகத்தை உடையவளாய் தன் குடும்பத்தாருடன் ஒன்றுப்பட்டிருக்கிறாள்" என்று தலைவன் தன் இதயத்திடம் எடுத்துச் சொல்லிக்கொண்டானும். இப்படி நயம்பட, திறம்படக் கபிலர்எழுதியுள்ள இப்பாடலில் தலைவியின் பண்பு—நமது தமிழினத்திற்கு மட்டுமேயுள்ள தனிப்பண்பு!

"கடலா.... துளியா....?"

[வை. சு. மணியன்]

மாலை நேரம்—

வெள்ளிய அலைகளால் மண் மகளைக் கரையோரம் வந்து தழுவிப் பார்த்தான் கடல் கள்வன்—

ஏதோ சிந்தனையில் நீலவான் வெளியிடையே சிரித்துக் கிளம்பிய நிலவுக் கன்னியின் மஞ்சள் நிற முகத்தைக் கண்டவண்ண மிருந்தேன்...

"கோல முழுதும் காட்டிவிட்டாற் காதற் கொள்ளையிற் றாமோ இவ்வுலகம்" மிடுக்கும் நிறைந்திட்ட புதுவையின் பழைய குரலின் இனிமை நெஞ்சில் சுழன்றது.

நாட்டுப்புற நங்கையின் நளினம் நிறைந்த, மஞ்சள் பூசிய முகத்தைப் போல் தோன்றிய நிலவுக் கன்னி, நாகரிக மங்கையைப்போல் 'மா' பூசிக்கொண்டாள் சிறிது நேரத்திற்குள்.

திடீரென்று முழங்கைமீது ஏதோ சில்லிடவே கையை உற்றுநோக்கினேன். முத்துப்போல் உருண்டையாக நீர்த்துளியொன்று என் புறங்கையிலே இருந்தது. அச்சிறு துளி என்னை நோக்கி "நான் யார் தெரியுமா?" என்று கேட்டது.

ஒருகணம் என்புருவங்கள் கம்பளிப் புழுவைப்போல நெளிந்தன.

"தெரியவில்லையே........நீ தான் யாரென்று சொல்லேன்பார்ப்போம்" என் குரலிலே ஏளனம் நிறைந்தது.

அதுவோ பொறுமையுடன் பெருமை நிறைந்த குரலில் சொல்லிற்று.

"நான்தான் கடல்..."

'ஓ'வென்றிரையும் கடலலையின் அலையோசையை மீறிக்கொண்டு வெடித்தது, நகைப்பொலி.

"மனிதர்கள் சிரிப்பதில் கெட்டிக்காரர்களே தவிர..."

உடனே குறுக்கிட்டேன்.

"பிறகென்ன அழச்சொல்லுகின்றாயா உனது பெருமை நிறைந்த பேச்சைக்கேட்டு..."

"உன்னை அழச்சொல்ல நான் யார்? நான் கேட்பதற்குச் சற்றுப் பொறுமையுடன் இருந்து பதில் சொல்லேன்......பிறகு நீ சிரிப்பதில் எனக்கு ஒன்றும் தடையில்லை.

"ஓ... அப்படியா...... கேளேன் உன் கேள்விகளை."

சிறு நீர்த்துளி தொடர்ந்தது.

"நீ ஏன் சிரித்தாய் முதலில்...?"

"உன்னுடைய தற்பெருமையை நினைத்தால் எனக்கு இப்போதுகூடச் சிரிப்புத்தான் வருகுது..."

"ஏன்..."

"உன்னைக் கடல் என்று கூறினாயே அதை நினைத்துதான்..."

"நம்பிக்கையில்லையா..."

"நம்பிக்கை எப்படிப் பிறக்கும்? வெள்ளிய அலைகளுடன் தவழும் அப்பெரிய கடலெங்கே? நீர்த்ததுளி நீ, வியர்வை முத்தினைப்போல் என் கரங்களில் உட்கார்ந்துகொண்டு நான்தான் கடல் என்று கூறுகிறாயே, சிரிப்பு வராதா?"

"ஓகோ... அப்படியா... சரி போகட்டும்... நீ இப்போது எதன் மீது அமர்ந்திருக்கின்றாய்?"

"மணல்மீது..." வேடிக்கையால் உள்ளம் பூரிக்கச் சொன்னேன்.

"உன் கைகள் அழுக்கானாலும் பரவாயில்லை. ஒரு பிடி மண்ணை எடுத்து கீழே போடேன்."

நானும் அப்படியே செய்தேன்.

"சரி... இப்போது உன் கைகளைப் பார்"

மணல் ஒட்டிக்கொண்டிருந்தது.

"உன் கைகளிலே என்ன?"

"மணல்" என்றேன் அமைதியுடன்.

"உனக்கெதிரில் பரந்து கிடப்பதென்ன?"

"கடல்..."

"அப்போது நான்..."

"நீர்த்துளி நீ" என்றேன் தயங்கிய வண்ணம்.

"சீ! இந்த மனிதர்களுக்கு நியாய புத்தியே கிடையாது..."

மேலும் அதன் சொற்கள் வெளி வருவதற்கு முன், நீர்த்துளியைத் துடைத்துவிட்டேன்.

ஆம்! அந்தக் கடல் அழிந்தே விட்டது.

★

திராவிடநாடு ★ ★ ★ ★ ★

பொங்கல் மலர்

★

சி. என். ஏ.

தீட்டும்

சிந்தனைச் சித்திரங்கள்
அறிவுலகக் கட்டுரைகள்

★

சிறு கதைகள்
ஓவியங்கள்
ஒப்பற்ற கருத்துக் குவியல்கள்

அத்தனையும்

எழிலும் அறிவும் மணக்கிறது!

★

இன்றே உங்கள் பிரதிகளுக்கு ஏற்பாடு செய்துகொள்ளுங்கள்.

இந்த ஆண்டுப் பொங்கல் மலர், உங்கள் நூலகத்துக்கோர் அறிவுக் களஞ்சியம்.

★

விலை ரூ. 1--50

கண் பனி நிறுத்தல் எளிதோ?

[நா. நாராயணன்]

பொருள் வயிற் பிரிந்தான் தலைமகன். பொறுத்தல் மகளிர்க்குக் கடன்தானே?

காலம் குறித்துச் சென்ற கள்ளன் அக்காலம் வந்தும் தான் வந்தான் அல்லன். என் செய்வாள் அவள்?

இத்தனைக்கும் அவள் வசதிக் குறைவானவளா? அல்லது வளம் துறந்தவளா? இல்லையே!

இட்டது செய்ய ஏவலாட்கள்; எடுத்தது முடிக்க இளம் பணிப் பெண்கள்; கேட்டது கிடைக்க மனம் நிறை பெற்ருேர்; ஊட்டி விடற்கோ உறவினர், தாதியர்.

அவள் நடந்தால் அடிநோகும் என்றெண்ணி மலர் விரிக்கும் மகளிர் உண்டு.

காதல் வயப்பட்ட கன்னிக்கு இவையெல்லாமா வேண்டும்? காதலன் வரவும் உறவுமல்லவோ அவளுக்குக் கனிந்திட்ட இன்பச்சாறு.

அவன்தான் அவளை வாடவிட்டுப் பொருள் நாடி ஓடிவிட்டானே! தேடற்கரியதல்லவே அப்பொருள்?

காதலர்கள் கூடி மகிழவேண்டிய காலம்; கன்னியர்கள் ஓடி விளையாடிக் கணவன் மார்பில் முகம் புதைக்கவேண்டிய பருவம்; முன் பனியின் முடிவும் இளவேனியின் தொடக்கமும்.

குரவம் மலர்ந்து குவலயம் மணக்கிறது.

இந்த மலர்களுக்கு மனம் என்பதே இல்லையா? தான் மலர்வதுடன் மணமும் வேறு பரப்பி, தலைவனைப் பிரிந்த மகளிரின் உயிரை வாட்டுவதில் இவை என்ன இன்பம் கண்டனவோ?

அகன்ற ஆறு; நீண்ட கரை; அருகில் அவள் உறைவிடம். மாவும் மருதமும் உயர்ந்து, வளர்ந்து தழைத்துக் கிளைத்து நிற்கின்றன.

அப்போதுதான் வெளிக் கிளம்பும் பசுமையும் பட்டும் போன்ற இளந் தளிர்கள், பார்த்துக் கொண்டே இருக்கலாம் போல் அத்தனை அழகு.

மொட்டை விட்டு விரிந்த, கொத்துக் கொத்தான புதிய மாம்பூக்கள், அம்மரத்திற்குத்தான் எத்துணை பெருமை. பூவாகிக், காயாகிக், கனியுமாகிப், பிறருக்கு அளிப்பதில் அது நிகரற்றது.

பிரிந்து சென்றவன் செலவு தவிர்த்து நெருங்கியிருந்திருந்தால் இப்போது அவளும் பூத்திருப்பாள், பிள்ளைக்கனி கொடுக்க. பிறந்த தன் பயனையும் அடைந்திருப்பாள். பாழும் நினைவுகள் அவள் உள்ளத்தை வருத்துகின்றன. உணர்வு மறந்து நிற்கிருள்.

கனி கொடுக்கும் 'மா' கவலைகளையும் ஏன் கொடுக்கிறது?

புகையொத்த மேகக் கூட்டங்கள் சோலையில் தவழ்ந்து விளையாடுகின்றன. வானமெங்கும் வெண்பட்டு விரித்தாற் போன்று ஒரே அழகு மயக்கம். உவ்வின்பத்தில் மாந்தித் திளைத்த குயிலொன்று தன் பேட்டினைக் கூவி அழைக்கிறது.

குயில்களுக்கென்ன பொருளா? புகழா? என்ன தேவை? ஆணுக்குப் பெண் வேண்டும்; அனுபவிக்க இன்பம் வேண்டும். அவ்வளவு போதும். அவைகளின் இன்பத்துக்கிடையிலே குறுக்கிட யாருக்கும் உரிமை இல்லை.

நினைத்ததைச் செய்யும் ஆற்றல் அவைகளுக்கு உண்டு; அங்கு காவல் இல்லை. விரும்பியதை அடைய அவைகளால் முடியும்; அந்த இன்ப உலகிலே கட்டுப்பாடு இல்லை.

இன்பம்! இன்பம்! அதுவே வேண்டுவதும், அவைகள் விழைவதும்.

தன் பெடைக்குப் பாடிக் காட்டுகின்ற குயில், துணையுடன் கூடிக் களிக்கின்ற அழகு அவளுக்குப் பழைய நினைவுகளை ஏற்படுத்துகிறது.

மாலை நேரத்திலே சோலையிலே அக்கள்ளன் விளைவித்த சேட்டைகள்; மயக்கத்தே அவள் இருக்க, முயக்கி அவன் இறுக்க, அந்நிலை கண்டு மானும் மயிலும் கண் புதைத்தனவே,

கலவிக் களியின் மயக்கத்தே கலைபோய் அகல, அவள் நிலவைத் துகிலென்று எடுத்து உடுத்தாளே,

அந்த நினைவு அலைகள் தோன்றித் தோன்றி அவன் பிரிவை, அப் பிரிவால் விளைந்த துயரை, மேலும் மேலும் அதிகரிக்கச் செய்கின்றன.

மனம் விம்மி அழுகிருள். வேறு என்ன செய்யமுடியும் அவளால்? கண்கள் பனிக்கின்றன. இனி அதனை நிறுத்த அவள் காதலன் ஒருவனால் தான் முடியும்.

கண்பனி நிறுத்தல் எளிதோ குரவு
மலர்த்
தற்சிர நீங்கிய அரும்பவிழ் வேனில்
அறலலிர் வார்மணல் அகலியாற் றடை
கரைத்
துறையணி மருது தொகல்கொள
வோங்கிக்
கலிழ் தளிர் அணிந்த இருஞ்சினை
மாஅத்
திணர்த்தை புதுப்பூ நிறைத்த
பொங்கர்ப்
புகைபுரை அம்மஞ் ஞூர
நுகர் குயில் அகவும் குரல்
கேட்போர்க்கே.

—அகநானூறு.

"எந்நாளும் காப்போம் இந்நாட்டை"

கிருட்டினன்

குறையாத விளைபொருளும், குன்றாத வளமும், அறிஞரும் அழிவில்லாச் செல்வமும், எல்லோரும் விரும்பக்கூடியதாய் எக்காலத்தும் அழிவில்லாததாய் அமைந்ததும், மிக்க பொருள் கொடுப்பதும் மேம்பட வாழ்வதும், கொட்டும் மழையாலும் உயர்ந்த மலையிலிருந்து ஆறாக வரும் நீர் வளத்தாலும் பெருமைபட்டு நோயின்றி இருத்தலும், செல்வமும் செழித்தோங்கும் பொருள் வளமும், இன்ப வாழ்வும், நல்லரசும் நற்காவலும் அமைந்ததே நாடு என்றும், நம்மிடையே பல வகையாக மாறும் பல கூட்டங்களும், உடனிருந்து அழிவு செய்யும் பகையும், பகைவரால் கெடுக்கப்படாததாய், கெட்டுவிட்ட காலத்தும் வளம் குன்றாததாய் இருப்பதை நாடு என்றும், மிக்க பசியும், மிகுதியான நோயும் வெளியே இருந்து வந்து தாக்கித் துன்பம் செய்யும் பகையும் தன்னிடத்தே சேராமல் நல்லமுறையில் நலம்பெற்றுத் திகழ்வதே நாடு என்றும் வள்ளுவப் பெருந்தகை வகை வகையாகப் பாடிச் சென்றார் பத்துக் குறளிலே. பாருக்கெல்லாம் பயனுறும் வகையில் பாங்குறப் பகன்று சென்ற கருத்தை நாம் பார்த்தோம்.

ஆம்! அந்தக் கருத்துப்பட அமையப்பெற்றதுதான் நமதுநாடு; பகைபற்றத் தொடங்கிற்று.

நம் நாடு பழம்பெரு நாடு! பாருக்கெலாம் திலகம். வீரரும் அவரிசை விரித்திடு புலவரும் பாரெலாம் பெரும்புகழ் பரப்பிய நாடு! அறத்தைத் தன் தலையாகக் கொண்ட தனிப்பெரும் நாடு. வீரரைப் பெறாத மேன்மைதீர் மங்கையை ஊரவர் மலடியென்றுரைத்திட்ட நாடு! முத்திசைக் கடலும், மூடுபனி நிறைந்த இமய மாமலை வடக்கிலும் எல்லையினைக் கொண்ட ஏற்றமிகு நாடு! கங்கையும், சிந்துவும், யமுனையும், சுனைகளும் புனல்களும் இன்னரும் பொழில்களும் இணையிலா வளங்களும் உன்னத மலைகளும் ஓங்கி வளர்ந்து ஒளிர்தரும் நாடு! பைந்நிறப் பழனம் பசியிலாதளிக்க மைந்நிற முகில்கள் வழங்கும் பொன்னாடு! என்ற கருத்தை, பாரதி உள்ளங்கை நெல்லிக் கனியென உரைத்துச் சென்றதை நாம் மறக்க முடியாது.

கன்னலும் செந்நெலும் கலந்து குலுங்கிடப் புன்னகைப் பூத்துப் பொலிவுற்ற நாடு! வந்தவருக்கெல்லாம் வாரி வழங்கிய வள்ளல்கள் மிகுந்த மாபெரும் நாடு, வளமிக்க நாடு!

நாம் நம் தாயின் வயிற்றில் இருந்து பிறந்ததும் தங்கமெனத் தாங்கி இம்மண்ணிலே மாண்புடன் சுதந்தர வீரனாக, எழுத்தாளனாக பேச்சாளனாக வாழ, வளர, வாய்ப்பளித்த நாடு.

நாம் பிறந்த நாட்டை நம் தாய் தந்தை வீட்டை நன்றிகெட்ட நய வஞ்சகன் நஞ்சினும் கொடியவன் நாடி வந்தான். செழித்து வரும் பூமியைச் சிறுமதியன் சிறுகச் சிறுக பிடித்துவிடுவோம் என்று எண்ணினான். வீம்பு செய்யும் வீணனை விடுவதா நமது நாட்டில் என்று வீர முழக்கமிட்டு வெகுண்டெழுந்தனர் போர்க் கருவியேந்தி நமது நாட்டார். பட்டிதொட்டியிலுள்ள பாமர மக்களும் புத்துணர்ச்சி பெற்றுப் புறப்பட்டனர் வீரர் படைக்கு! தங்கத்தையும் பொருளையும் தரணியிலுள்ளோர் அள்ளி அள்ளிக் கொடுத்தனர் பாதுகாப்புநிதிக்கு. கொடுப்பதில் குமணனாக, இன்னும் கொடுத்துக்கொண்டே இருக்கின்றனர் நம் நாட்டார்.

உலக நாடுகள் ஒற்றுமையோடு நமது நாட்டிற்கு உதவி செய்ய முன்வந்ததைக் கண்டான் எதிரி. கலக்கம் கொண்டான். முதலைக்கண்ணீர் வடிக்கும் மூர்க்கனை நம் அரசு நம்பாது என்பதை நாம் அறிவோம். நேசக்கரம் என்று சொல்லி ஏய்த்து நம்மை நிலைகுலையச்செய்த வீணனை நம் அரசு நம்பாது என்பது நமக்கெல்லாம் தெரியும். "பூனை கண்ணை மூடிக்கொண்டு பால் குடிக்கும் போது உலகமே இருண்டுவிட்டதாக எண்ணுமாம்." அதைப் போன்று எண்ணுகிறான் எதிரி என்பது நாம் அறியமுடியாததல்ல.

சீனாவின் போக்கு, கபடநாடகமாக இருக்கிறது. படையை திரும்பப் பெறுகிறேன் என்று பத்திரிகையில் எழுதுவதையும், பீகிங் வானொலியில் உளறுவதையும் நாம் நம்புவதற்கில்லை. பலம் பெருகுகிறது நமக்கு என்பதை எண்ணிய எதிரி, விலாவொடிந்து வீடு திரும்ப எண்ணுவதை நாம் நம்பமுடியாது. "விட்டதடி ஆசை விளாம்பழத்து ஓட்டுடன் என்பது" போன்று மண்ணாசை பிடித்த மதிகெட்ட சீனன்; சமாதானம் என்றும், அறிக்கையென்றும் நம்மை ஏய்க்கப் பார்க்கிறான். "சாகசமாய் முயல் சிங்கத்தைக் கொன்ற சரிதையை" நாம் நினைவில் கொள்ளவேண்டும்.

'கண்ணி'வெடி வைக்கிறான். காடுகளில் பதுங்குகிறான். நம் படையினர் மொழியில் குரல் கொடுத்து ஏய்க்கிறான். மலைவாசிகளுக்கு தன் நாட்டுப் பெண்ணைக் கொடுத்து உளவு பார்க்க எண்ணுகிறான். போர் ஓய்ந்தது என்கிறான். புளுகுமொழி உரைக்கிறான். வீடு திரும்புகிறோம் என்கிறான். நம் வீரரை மாய்க்கிறான். தூரத்தில் சென்றுவிட்டேன் என்கிறான். துப்பாக்கி கொண்டு சுடுகிறான்.

இனியும் பொறுக்கமுடியாது. எதிரி நம் எல்லையைவிட்டு ஓடும் வரை, ஓட ஓட விரட்டியடிக்கவேண்டும்.

அரசுக்கு உதவிபுரிய நம் நாட்டு மக்கள் தயாராக இருக்கிறார்கள்— என்றும் தயாராக இருப்பார்கள். ஆண்கள் மட்டுமின்றி பெண்களும் தயார் என்று அறைகூவல்விடுகின்றனர். சீறிவந்த புலியதனைச் சிங்கார மறத்தியொருத்தி துரத்தியடித்த பழங்கதை கேட்டு துள்ளியெழுகின்றனர் நம் பெண்குலத்தோர்.

எனவே, எதிரி நம் மண்ணிலிருந்து ஏகும்வரை எள்ளளவும் இரக்கம் காட்டாது; நம் எல்லைக் கோட்டை நாம் அடையும்வரை கருத்தோடும் கவனத்தோடும் அரசுக்கு நம்மாலான உதவியை ஏற்ற வகையெலாம் செய்து; எந்நாட்டான் நம் நாட்டில் நாடு பிடிக்கும் ஆசையில் அடியெடுத்துவைத்து நுழைந்தாலும் இம்மியும் விட்டுக் கொடுக்காமல் இன்றுபோல் என்றென்றும் தயங்கமாட்டோம் என்று கூறி, எந்நாளும் காப்போம் இந்நாட்டை.

"மறுமணம்"

[செல்வம்]

நான் படபடக்கும் மனத்தோடு அறைக் கதவைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்தேன். தங்கச் சிலை என்றும், தளிர்மேனி என்றும் நான் எண்ணி எண்ணி மகிழ்ந்திருந்த என்னுடைய அன்பிற்குரியவள் வதங்கி உதிர்ந்துபோன மலரிதழைப் போன்று கட்டிலில் துவண்டுகிடந்தாள். எதிர்பாராத அதிர்ச்சியினால் நிலைகலங்கிப்போன நான் "மல்லிகா" என்று அழைத்தேன். மிகுந்த மனவலிமையை வரவழைத்துக்கொண்டுதான் அவளை அழைத்தேன் என்றாலும், என்னுடைய எண்ணத்தைத் தாக்கி விட்ட அதிர்ச்சி கரகரப்பான குரலின் மூலம் என்னுடைய கலக்கத்தைக் காட்டிக்கொடுத்துவிட்டது. அவளுடைய விழிகளைத் தழுவி நின்ற இமைகள் படபடத்தன. அவற்றினூடே அலைந்துகொண்டிருந்த இரு கருவிழிகள் என்னை ஒரு கணம் உற்றுநோக்கின! உறவாடிப்பழகிய அந்த இரு விழிகளில் மின்னலென ஒருவித புத்தொளி பளிச்சிட்டது! 'அத்தான்' என்ற மெல்லிய குரலில் என்னை வரவேற்றவாறு படுக்கையினின்றும் எழ முயன்றாள். உடனே நான் அவளுடைய தோளைப்பற்றி 'வேண்டாம் மல்லிகா, படுத்துக் கொள், படுத்தபடியே பேசு' என்று அவளை மீண்டும் படுக்கையில் சாய்த்தவாறே அவளருகில் அமர்ந்தேன்.

மிகுந்த களைப்புடன் படுக்கையில் சாய்ந்திருந்த அவளை உற்று நோக்கினேன். பத்து நாட்களுக்குள் எவ்வளவு மாற்றம்! எதையோ எப்போதும் தேடிக்கொண்டு இங்குமங்கும் சுழன்றோடும் கருவிழிகள் களையிழந்து சோர்ந்து, தோய்ந்து கிடந்தன. அவளுடைய பட்டு இதழ்களைத் தொட்டுத் தழுவிச் செல்லும் மென்னகையைக் கண்டு உவகையால் துள்ளும் எனது உள்ளம், நோயின் வெம்மையால் உலர்ந்து காய்ந்த அவளுடைய உதடுகளையும், ஒளியிழந்து நிறம் கம்மி, மெருகு குலைந்த மெல்லிய உடலையும் காணும்போது சொல்லொணு வேதனையடைந்தது. தாய் வீட்டிற்குச் சென்று வருகிறேன் என்று மகிழ்ச்சியுடன் கிளம்பியவள், இப்படி மீளாத மரணப்படுக்கையை அணைத்துக்கொள்வாள் என்று யாருக்குத் தெரியும்? என்னுடைய வாழ்க்கையின் உயிர்த்துடிப்பான அவள் இந்தக் கொடுமை நிறை காய்ச்சலில் இறந்துவிட்டால் ......! அப்பப்பா! என்னை எதிர்நோக்கியிருக்கும் அந்த மணமற்ற, —சுவையற்ற—ஒளியற்ற — இருள் நிறைந்த பயங்கர சூனியப் பிரதேசத்தை நினைக்கவே எனக்கு அச்சமாகவும், அருவருப்பாகவும் இருந்தது. அருகில் படுத்திருந்த மல்லிகாவைக் காணமுடியாதபடி என்னுடைய கண்களில் நீர் திரண்டது. பனி முத்துக்களைப்போன்று இரண்டு சொட்டுக் கண்ணீர் கொடியெனத் துவண்டு கிடந்த மல்லிகாவின் மென் கரத்தில் விழுந்தன. களைப்பினால் அலுத்துப்போய்க் கிடந்த மல்லிகா கண்களைச் சுழற்றி என்னை நோக்கினாள். அந்த விழிகளில் அனுதாபமும் கழிவிரக்கமும் நிறைந்து நின்றன. அவள் சிரிக்கத்தான் முயன்றாள், ஏன், சிரிக்கவும் செய்தாள்! பாலைவனத்தின் வறட்சி ஏனோ அவளுடைய சிரிப்பில் கலந்து மின்னியது!

"என்ன அத்தான் கண்ணீர் விடுகிறீர்கள்—எனக்கு ஆறுதல் சொல்ல வேண்டிய நீங்களே இப்படிக் கலங்கினால்......! எனக்கு ஒன்றுமில்லை அத்தான், இலேசான காய்ச்சல், இரண்டு நாட்களில் சரியாகிவிடும். போங்கள் சற்றுக் காலாற வெளியில் போய் வாருங்கள் அத்தான்"— அவருடைய குரலில் பாசமும், பற்றும் நிறைந்து வழிந்தன.

என்னதான் "பிழைத்துக்கொள்வேன்" என்று நோயாளி கூறினாலும், அந்த வார்த்தைகளில் இயற்கையான உயிர்த் துடிப்பு இல்லையென்றால், அந்த உறுதிமொழிகள் அனைத்தும் வெற்றுமொழிகளாகி விடுகின்றன. மரண மாளிகையை நோக்கி வெகுவேகமாகப் பயணம் செய்து கொண்டிருந்த அவளுடைய உடல் முடிவைப் பற்றி விளக்கம் கூறிக்கொண்டிருந்தது. ஆனால் சதையும், எலும்புகளும் கொண்ட சடலத்திற்குள் ஒளிந்துகொண்டிருக்கும் பற்றும், பாச உணர்வும் எனக்கு உணர்ச்சியற்ற — உயிர்த்துடிப்பற்ற வெறும் வார்த்தைகளின் மூலம் ஆறுதல் கூறின. மனைவியின் அன்பைத்தான் என்னால் புரிந்துகொள்ள முடிந்தது. அவளுடைய முடிவைப் பற்றி உறுதியிட்டுக்கூற முடியவில்லை! நம்பிக்கையிலும், அவநம்பிக்கையிலும் இரண்டு நாட்கள் நகர்ந்தன. பகல்-இரவு பாராமல் வாழ்வில் துணை சேர்ந்தவளுக்கு என்னாலியன்ற உதவிகளை உடனிருந்தே செய்து கொண்டிருந்தேன். மூன்றாம் நாள் மாலை மன அமைதிபெற வீட்டோரம் சென்றுகொண்டிருந்த பொன்னி நதியின் கரையோரம் சென்றுவிட்டு வீடு திரும்பிக்கொண்டிருந்தேன். தெருக் கோடியில் வரும்போதே வீட்டில் எழும்பிய அழுகுரல் என்னுடைய செவிகளைத் தாக்கியது! நடந்ததைப் புரிந்துகொண்டேன், நடைப்பிணமானேன்.

நடக்கவேண்டியவைகள் அனைத்தும் நடந்துமுடிந்தன! வாழ்வின் ஒளியாயிருந்த அவள் இருளில் என்னைத் தள்ளிவிட்டு ஒளியுடன் மறைந்துவிட்டாள்! என்னுடைய உயிர் இயக்கத்தின் உறுதுணையாய் இருந்தவள், என்னுயிரை எடுத்துக் கொண்டு எங்கோ பறந்துவிட்டாள்! அகன்ற நீல நிற வானத்திலும், நீரோடையிலும், அழகான மலர்

களிலும் இனிமை நிரம்பிய கவிதைகளிலும், அழகு தமிழிலும் அவளைத் தேடினேன்! நான் தேடத் தேட அவள் விலகி விலகிச் சென்று கொண்டிருந்தாள்! களைத்துப் போனேன், கடும் புயலில் சிக்கிய மரக்கலம்போல் நிலையிழந்து தவித்தேன்! ஒளிகாட்டுவாரில்லை! மாறாக, துயர் அளிக்க வந்தார்கள்.

சின்னஞ் சிறிய பருவமானாலும், செதுக்கி வைத்த அழகு தவழும் அற்புதப் படைப்பைப் போன்ற மங்கையானாலும், அறிவும், ஆற்றலும், எழிலும் இளமையும் நிரம்பப் பெற்றவளானாலும், ஒருத்தி கணவனை இழந்துவிட்டால் அவளுக்கு மீண்டும் வாழ்க்கையில்இன்பமில்லை; மறுமண வாழ்வில்லை; ஆசாபாசங்கள் நிறைந்த இப்பெருவுலகில் அவளுக்கு மகிழ்ச்சியூட்ட எதுவும்கிடையாது! அப்படி எதையும் உண்டாக்க இந்தச் சமுதாயம் இடமளிக்காது. ஆனால் வலிவிழந்து பொலிவற்று, நரை திரண்டு உடல் தளர்ந்து, மரணத்தின் தலைவாயிலை நெருங்கிக் கொண்டிருக்கும் ஆண் மகன் மட்டும் மனைவியை இழந்துவிட்டால், அவனுக்கு வாழ்க்கையில் மீண்டும் மணவாழ்க்கை அமைத்துத் தர எத்தனை இளம் பெண்களை வேண்டுமானாலும் இந்தச் சமுதாயம் பலியிடத் தயாராயுள்ளது! என்னே கொடுமை!

சில திங்கள்கள் கழித்து என்னுடைய அன்னையும், தந்தையும் என்னுடன் தனிமையில் பேசுவதற்காக அறைக்குள் நுழைந்தனர். சோகத்தின் எல்லைவரை சென்றுவிட்ட என்னை வேதனைகலந்த பெருமூச்சுடன் என்னுடைய அன்னை ஏறிட்டு நோக்கினார்கள்! பல்வேறு உணர்ச்சிகளை ஏந்தி நின்ற அந்தத் திருவுருவத்தின் கனிவு நிரம்பிய முகத்தை என்னால் நிமிர்ந்துகூடப் பார்க்கமுடியவில்லை! மகனின் துயரக்கோலம் அன்னையின் நெஞ்சில் எந்த அளவிற்கு ஆறாத வடுவினை ஏற்படுத்தியிருக்கிறது என்பதை அவருடைய பெருமூச்சு, தெள்ளத்தெளிவுற எடுத்துக் காட்டியது.

"தம்பி உனக்கு மறுமணம் செய்வதாக முடிவு செய்திருக்கிறேனப்பா'' — தந்தைதான் கூறினார். நான் சற்றே தலை நிமிர்ந்து அவரை நோக்கினேன். அவர் எதையோ பேசிக்கொண்டிருந்தார். எனக்கு ஒன்றும் புரியவில்லை! அவர் பேசி முடித்த பிறகு நான் "அப்பா, எனக்கு மறுமணம் செய்ய விரும்பினால், கணவனை இளம் வயதில் இழந்துவிட்ட ஒரு பெண்ணைப் பார்த்து அவளை எனக்கு மண முடித்து வையுங்கள். ஒளியிழந்த அவளுடைய வாழ்விற்கு ஒளியேற்றுவதின் மூலம் நான் பெருமையடைகிறேன்! அப்படிச் செய்யச் சமுதாய அமைப்பு இடந்தராது என்றால், பேசாமல் திருமணப் பேச்சை விட்டுவிட்டு வேறு செய்தி பேசுங்கள்'' என்று கண்டிப்புடன் கூறி முடித்தேன்!

அவர் துடித்தார்! சமுதாய அமைப்பிற்கும், தனிப்பட்ட குடும்பத்தின் பெருமைக்கும் நான் குழி தோண்டுவதாகக் குமுறினார். அவர் பார்த்துள்ள பெண்ணை மணம் செய்து கொள்ளும்படி வற்புறுத்தினார், கெஞ்சினார், கடிந்தார், அதை —நான் மறுக்கவே சினந்து வெளியேறினார்! நெஞ்சில் வேதனைப் பொதியைச் சுமந்துகொண்டு மீளாத் துயரில் வீழ்ந்துவிட்டஎன்னை மிகுந்த அன்புடன் நோக்கிக் கனிவானமொழிகளைப்பேசி என்னுடைய அன்னையும் மறுமணத்திற்கு என்னை இசையவைக்க முயன்றார்கள். நான் வேதனையோடும், ஆனால், மிகுந்த கண்டிப்புடனும் "அம்மா, என்னுடைய நல்வாழ்விற்காக நீங்கள் எனக்கு மறுமணம் செய்யப் போவதாயிருந்தால், தயவு செய்து நான் சொன்னபடி ஒரு கைம் பெண்ணைப் பார்த்து மணமுடியுங்கள். அதுதான் முறையானதுங்கூட! மகனுடைய நலவாழ்வினைக் காட்டிலும், குடும்பப் பெருமையும், கேடுகெட்ட—நெறி முறையற்ற இந்தச் சமுதாயத்தின கட்டுத் திட்டங்களும் உங்களுக்கு முக்கியமானவைகளாக இருந்தால், அருள் கூர்ந்து உங்களுக்கு ஒரு மகன் பிறக்கவில்லையென்று எண்ணி நெஞ்சைக் கல்லாக்கிக் கொள்ளுங்கள்! நான் உங்களுடைய மகனாக இருப்பதால் தான், என்னுடைய மறுமணத்திற்கு முயலுகின்றீர்கள், மாறாக உங்களுக்கு ஒரு மகள் பிறந்து அவள் தன்னுடைய இள வயதில் கணவனை இழந்துவிட்டு வீடு வந்திருப்பின், அவளைக் காலமெல்லாம் இருள் நிறைந்த சமுதாயத்தின் காராக்கிரகத்தில் தள்ளிவிட்டு வெறும் கண்ணீரை மட்டும் சிந்தி ஆறுதலடைந்துவிடுவீர்கள்! ஏனம்மா இந்த அநீதி! ஆணுக்கு ஒரு நீதியும் பெண்ணுக்கு ஒரு நீதியும் அமைத்துத் தந்த இந்தச் சமுதாயத்தைத்தான் நாம் உயர்ந்த, உன்னதமான சமுதாய அமைப்பு என்று துதிபாடிக் கொண்டிருக்கிறோம்! என்ன செய்வது எல்லோருக்குமா அவ்வளவு எளிதில் தெளிவு பிறந்துவிடுகிறது! நீங்கள் ஏனம்மா நின்று கொண்டேயிருக்கிறீர்கள்! நான் சொன்ன இரண்டில் நீங்கள் எதைச் செய்தாலும எனக்குச் சம்மதமே! போங்கள் அம்மா, போய்ச் சிந்தித்து ஒரு நல்ல முடிவிற்கு வாருங்கள்!'' என்று நெஞ்சக் குமுறலை வார்த்தைகளாக உதிர்த்தேன்.

கண்களில் நீர் வடியத், தன்னுடைய மகனின் சீர்திருத்தக் கருத்துக்கள் புரியாததாலோ என்னவோ, அல்லது புரிந்து அதன்மூலம் ஏற்பட்டுவிட்ட குழப்பத்தாலோ என்னவோ என்னுடைய அன்னை அறையைவிட்டு வெளியே சென்றார்கள். நானும் கண்களைத் துடைத்துக்கொண்டு பலகணியின்வழியாக வெளியே நோக்கினேன். இளம் நீல நிற வானம் தெளிவாகக் காணப்பட்டது. வானத்தில் படிந்திருந்த மேகங்கள் அனைத்தும் எங்கோ சென்றுவிட்டன! என்னுடைய பார்வை எல்லையற்ற வானத்தை ஊடுருவி எங்கோ சென்றுகொண்டிருந்தது! என்னுடைய நெஞ்சில் நீக்கமற நிறைந்துவிட்ட என்னுடைய அன்பு மனைவி மல்லிகாவின் அழகுருவம் அகன்ற நீலநிற வானத்தில் எங்கு நோக்கினும் பிரதிபலிப்பதுபோல் தோன்றியது! அந்த உருவங்களில் ஒன்றை உற்று நோக்கினேன். மிகுந்த அழகுடனும் களையுடனும் திகழ்ந்த மல்லிகா திருவுருவம் தன்னுடைய பட்டு இதழ்களைக் குவித்துக்கொண்டு எப்போதும் போல் என்னை நெருங்குவது போன்ற ஓர் உணர்வு—அதன்பிறகு கணநேரப்பேரின்பம்! என்நிலை மறந்தேன்! திடுக்கிட்டு நிமிர்ந்து மீண்டும் வானத்தை உற்று நோக்கினேன்! வெறிச்சோடிப்போன அந்த எல்லையற்ற வானத்தையும் அதன் நீலநிற ஒளியையும்தான் என்னால் காணமுடிந்தது!

ஆடல் காணீரோ!

—[மு. தமிழ்நாகன்]—

அந்தி மயங்கும் வேளை; மந்தமாருதம் வீசிக்கொண்டிருந்தது. பகலவன் தன் முகத்தை ஆழ்கடலில் மறைத்துக் கொண்டான். வானவீதியில் கார்மேகங்கள் எக்காளமிட்டுக் கொண்டிருந்தன. நண்பர்கள் நால்வர், நடந்த களைப்பினால் பூத்துக் குலுங்கும் பூஞ்சோலையொன்றினுள் நுழைந்தனர். 'அப்பாடா!' என்று அருகே கிடந்த இருக்கையின் மீது அமர்ந்தனர்.

அதன் அருகே தடாகமொன்றில், தண்ணீரின் அலைகள் தாளக் கட்டுடன் பாடினாற் போன்று மெள்ள மெள்ள எழுந்து தாழ்ந்தன. அழகான காட்சி! ஏருழவர்கள் ஏற்றிப் புகழும் கார்காலம். கண்ணைக் கவரும் வண்ண மலர்கள் எண்ணிலா விதங்களில் எழிலாக அமைந்திருந்தன. ஓங்கார ஒலியில் இசை பாடிய வண்ணம், பூங்காவைவிட்டு நீங்காமல், தன்னிறை தாங்காமல் தாழ்ந்து கொடுக்கும் மெல்லிதழ்ப் பூக்களில் வண்டுகள் மதுவை உண்டன; மயக்கம் கொண்டன. தயக்கமின்றி தளிர்நடை போட்டவண்ணம், மழைத்த மேகங்களைக் கண்டு, மையல் கொண்டு, பூங்காவின் எழிலுக்கு எழில் செய்யும் விதத்தில் மயிலொன்று ஆடிக்கொண்டிருந்தது.

அப்பப்பா! எத்தனை பெரிய தோகை. இத்தனை நிறங்களென்று, விரல் விட்டுக்கூற வண்ணம், பரல் தன்னைப் பாயின் மேலே, பாங்குடன் பரப்பினாற்போல், ஆங்கு அத்தோகையினில் அமைந்துள்ள நிறங்கள் தம்மை, திறந்த இமை மூடாமல் திகைப்பாகப் பார்த்து நின்றனர். 'கைபுனைந்தியற்றா கவின்பெறு வனப்பன்ன!', பூங்காவின் எழிலைப் பருகியவண்ணமிருந்தனர்.

இரும்பை ஈர்க்கும் காந்த ஆற்றலும் எறும்பு சுவைக்கும் கரும்பின் இனிப்பும், ஒருங்கு அமைந்த கயல்விழி மாதரின் தளையவிழா தங்கத் தாமரைகள் தடாகமெங்கணும் தடையின்றி நிறைந்து நின்ற காட்சி, தன்மை பெறு காட்சியாகும். சுழன்றன கண்கள். திடுக்கிட்டனர் நண்பர்கள். மிடுக்காகச் சிலபேர் உருளும் விழிகொண்டு மருளத் தங்களை நோக்குகின்றனர் என்றுணர்ந்து வெடுக்கெனத் திரும்பினர். வெட்கித் தலை குனிந்தனர். கயல்களைப் போலொத்த கருவிழிகளுடனே, கருங்குவளை மலர்கள் பல, கணக்கற்ற பெருந் தொகையில் கண்விழித்து, தலையசைத்து தடாகத்தின் ஓர் சாரம் ஒய்யாரமாக நின்றன. இப்படி எத்தனையோ காட்சிகள், இளைத்து வந்த நண்பர்களுக்கு இன்விருந்தளித்தன.

கவ்விய வியப்புடன் அங்கே நண்பர்கள் நின்ற காலை, கவிஞர் ஒருவர் நுழைந்தார், கையிலே கவிதைச் சுவடியுடன்.

யாவரும் கண்டுகளித்த — வியப்படைந்த — செயப்படாத சிற்பமெனத் தன் வயப்படாமல், வியப்பின் வயப்பட்டு, பரவசமடைந்து நண்பர்கள் பார்த்துக் களித்த மலர்க்கா தென்படவில்லை கவியரசர் கண்களுக்கு. பூங்காவினுள் செல்லவில்லை அவர். அங்கோர் ஆடலரங்கத்தின் நுழைவாயிலின் வழியாக நுழைந்தார் நுண்மாண் நுழைபுலம் பெற்ற பொற்புடைக் கவிஞர். ஆம்! கவிஞர் சென்றபொழுது அங்கே ஓர் எழிலரசியின் நடனம் நிகழவிருந்தது.

சொல்லவாவேண்டும் மேடையின் அமைப்பை! கண்ணைப் பறிக்கும் வண்ண விளக்குகள் ஏராளம் விளங்கின. 'நீலவிதானத்து நித்திலப் பூப்பந்தரை'ப் போன்ற நிறமும், மாலை நேரத்து மேற்திசையில் மறையுமந்தப் பகலவன் மஞ்சள் நிறம் கொஞ்சமும், காலைப்பொழுதினிலே குணதிசையில் உதித்தெழும் கதிரவனின் பொன்னிறக் கதிர்களுக்கும் செந்நிறமும், ஆக முந்நிறமும் கலந்தமைந்தது போல அழகுடைய, [illegible]நிற மேடைத் திரைச்சீலை பார்ப்பவர் உள்ளத்தைப் பரவசப் படுத்தியது.

திரைச்சீலை மெள்ள விலகுகிறதே! ஆட்டம் ஆரம்பமாகப் போகின்றதோ, என்னவோ? ஆ! அதோ! பின்னணி இசை முன்னணியில் கேட்கின்றதே. எத்துணை இனிமையான இசை. பதினொரு நரம்புகளையுடைய — பண்டைத் தமிழர்கள் வகுத்தளித்த ஏழிசையும் எழிலாக இசைக்கவல்ல—மகரயாழின் பண்ணல்லவோ காற்றில் மிதந்து வருகின்றது. மத்தள ஓசையும் கேட்கின்றதே!

அதுவரை பொறுப்பரோ, துடித்தனர் ஆடல் காண; அடித்தனர் கைகளை; சிரம் தூக்கிப் பார்த்தார் கவிஞர். அப்பப்பா! எத்துணை கூட்டம். இந்நிகழ்ச்சியைக் காண விழித்திருக்கும் கண்கள்தான் எத்தனை! அதோ, திரை முற்றிலும் விலகிவிட்டதே! ஆ! கண்முன் காண்பது கனவா, நனவா? மேடையில் நிற்பது பெண்ணா அல்லது பேரழகுப் பெட்டகமா? நங்கையா அல்லது நல்லழகுச் சிற்பமா? கன்னியா அல்லை கடைந்தெடுத்த வார்ப்படமா? மங்கையா இல்லை மதியோன் மகிழ்ந்தெடுத்த மறுவிலா மதிமுகத்தாளா? சேயிழையா, இல்லை செங்கதிரோன் அருள்பெற்ற செவ்வல்லிக் கொடியா? ஆயிரம் கண் வேண்டுமே, அந்த அல்லிக் கொடியாளின் ஆடல் காண!

என்ன? வியப்பாக இருக்கிறதா உங்களுக்கு? ஆம்! நண்பர்கள் நால்வர் கண்ட மலர்க்கா தெரியவில்லை கவிஞரின் கண்களுக்கு. அங்கே ஓர் எழிலரசியின் ஆடலையே கண்டு களித்தார் கவிஞர். . கவியின் கண்ணல்லவா?

மருத நிலத்துப் பூங்காவொன்றில், மாலை வேளையில் கார் மேகங்களைக் கண்டு, மயிலினங்கள் ஆடின. தடாகத்துக் குளிர் அலைகள் மின்னொளிர் மேடைக்கு பொன் திரையெனப் பொலிவாக விளங்கின. தடாகத்துத் தாமரைகள் வண்ண ஒளியை அள்ளி வீசின. பின்னணி வேண்டுமல்லவா! வான வீதியில், நீலக் கடலின் நீராவியை உண்ட, இருண்ட மேகங்கள் இடி முழக்கம் செய்து, மத்தளத்தைப் போல ஒலித்தன. பூத்த பூக்களின் தேனைப் பிழிகின்ற, வண்டுகள், ஒலியில் மகரயாழின் இசையைப் பாடின. இவை யாவையும் காண கருங்குவளை மலர்கள் கண்விழித்து நின்றன.



அமைதி!!

1953-ம் ஆண்டு என்று நினைக்கிறேன்! செப்டம்பர் மாதத்தில் ஓர்நாள்!

பட்டுக்கோட்டை – அதிராம்பட்டினம் நெடுஞ்சாலையில் எனது கால்கள் அடிமேலடியாய் நகர்ந்துகொண்டிருந்தன! அவ்வேளை, நேர்த்தியான மாலை. மேற்குத் திக்கில் கதிரவன் பொன்னிறமாய்க் காட்சி தந்து கொண்டிருந்தான். பரந்து மிகவும் விரிந்து கிடந்த அந்தச் சாலையின் இருமருங்கும் உள்ள தென்னைகள் பார்ப்பதற்கு மிக அருமையான காட்சி. தென்னையினிடையே தெளிவான நெற்பயிர்கள் குளிர்ச்சி தந்தன!

சில குடிசைகள் இருமருங்கும் காணப்பட்டன. தென்னங் கீற்றால் வேயப்பட்ட கூரைகள். வேளாளர்கள் தம் மக்களை அணைத்தவண்ணமாய் அங்கே நின்றிருந்தனர். அவர்கள் வாழ்வின் நடவடிக்கைகளே அலாதிதான். இதை எண்ணியபடி வடபக்கமாகக் கண்களைச் சுழலவிட்டேன். ஒரு பாலம். அப்பாலத்தின் அடியே நீர் சலசலவென்று ஓடிக்கொண்டிருந்தது. அந்தப் பாலத்தின்மேல் ஒருவன் படுத்துக்கொண்டிருந்தான்! செருமல் ஒலி கேட்டது. அதைத் தொடர்ந்து முணுமுணுப்பு அவனிடமிருந்து வந்தது! அந்தப் பாலத்தின் பத்தடித் தொலைவில் ஓர் குடிசையும் தென்பட்டது!

எனக்குப் பின்னால் ஒருவர் வந்துகொண்டிருந்தார். நான் அவரைக் கவனிக்கவில்லை! படுத்திருந்த மனிதன் கண்டுகொண்டான். அவர் பெயரிட்டு அழைத்தான்! முக்கி முனகிப் பாலத்தின்மேலே அமர்ந்துகொண்டான்.

மீண்டும் "அண்ணே! லிங்கத்தண்ணே!" என்றான்.

"எப்பா, கண்ணுசாமி! என்ன வேண்டும்" வந்த மனிதர் கேட்டார்.

"ஒரு காபி சாப்பிடணும்... இரண்டணாக் காசு இருந்தாக் கொடேன்" என்றான்.

"அடடா! கண்ணுசாமி! என்னிடம் இப்ப காசு இல்லையே!" வந்த மனிதர் கைவிரித்தார்.

"அண்ணே! மனைவிக்கும் பையன்கள் இருவருக்கும் அம்மை போட்டிருக்கு. அதற்குத் தண்ணீர் கொடுக்க ஒன்றுமில்லை. எனக்கும் இரண்டு தினமா கடும் காய்ச்சல் கண்டிருக்கு. சாப்பிட்டு மூன்று நாளாகுது.

பாண்டியன்

கொஞ்சம் கொடுத்தா எழுந்திடுவேன்." அந்த இரக்கத்துக்குரிய மனிதன் சொன்னான்!

"வருந்துறேனப்பா! நான்கூட கண்ணுப் பிள்ளையிடம் பணம் வாங்கித்தான் மளிகைச் சாமான் வாங்கிட்டுப் போறேன். ஒரு சல்லிகூட இல்லை." அந்தப் பாலத்துப் பாட்டாளி இருமிக்கொண்டே படுத்தான். அந்த மனிதர் எனக்கு முன்னால் நடந்துகொண்டிருந்தார். எனது நடை தளர்ந்து கிடந்தது. பையில் கிடந்த நான்கணாவை எடுத்துக் கையில் வைத்துக்கொண்டேன். அந்த மனிதரிடம் கொடுக்க எண்ணினேன். ஆனால், என்ன மனமோ—கொடுக்க இசையவில்லை. இன்றும், ஏன் கொடுக்கவில்லை என்று எண்ணிப் பார்க்கிறேன். புலனாகவில்லை. உணரவும் முடியவில்லை. அந்த மனிதனின் அப்போதைய நிலைமை பசுமரத்தாணிபோற் பதிந்துவிட்டது.

நான்கணாக் காசு இருந்தால் அம்மனிதன் எழுந்து விடுவானாம்! அவன் எழுந்துவிட்டால் குடும்பம் குதூகலிக்குமாம்! இந்த இரண்டு வாக்கியங்களுக்குள் எவ்வளவு பொருள் உண்டு! அப்பொருள்மேல் எவ்வளவு செய்கைகள் உண்டு! அவனுக்கு நாதி யாருமே இல்லையென எண்ணினேன். இருந்தால் இவ்வளவு மாற்றத்துக்கு விடுவரா? என் மனம் கலங்கியது. சுற்றம், பந்துக்கள் எல்லாம் வெறும் பொய் என்றே எண்ணத் தோன்றியது!

நான் நடந்துகொண்டிருந்தேன். அமைதியற்ற நடையின் ஒவ்வொரு அடியிலும் அம்மனிதனின் உருவம் தெரிந்தது. காசு இல்லையே என்று கைவிரித்துச் செல்லும் மனிதருக்கும் எனக்கும் உள்ள வேற்றுமைகளைப் பார்த்தேன். நானே வெதும்பிக் கொண்டேன்! அம்மனிதர் கூறிய மட்டில் மீண்டும் ஒரு வார்த்தை கூடக் கூறாமல் படுத்துக்கொண்ட மனிதன் அமைதி பெற்றானா? இல்லை, எப்பவாவது பெறுவானா? இக்கேள்வி என்னை உறுத்திய வண்ணமாய் இருந்தது.

இப்பொழுது அந்தச் சாலையில் கதிரொளி இல்லை. மங்கியதோர் நிலவு மட்டும் கீழ்வானில் பூத்திருந்தது. எங்கும் வானப் பறவைகளின் ஒலி கேட்டது. வாய்க்கால்களில் நீரோட்டம் சலசலவென ஒலியுடன் பாய்ந்துகொண்டிருந்தது. என் அமைதியான நடையில் கடற்காற்றை நுகர முடிந்தது. ஆனால், அந்தக் காய்ச்சல்காரனுக்குக் கடுகளவும் உதவமுடியவில்லை. அந்தக் காற்றினிலே பச்சைப் பயிர்கள் தலையைச் சாய்ப்பதும், மேலெழுவதும், காதலனைக் கண்டவள் தலையைச் சாய்ப்பதும், நளினமாய்க் கண்தூக்கிப் பார்ப்பதும், கீழ் நோக்குவதும்போல இருந்தது.

"முருகு இப்பொழுது நீ என்ன சொல்கிறுய்?" இது ஒரு ஆடவன் குரல். எங்கிருந்தோ இக்குரல் வந்தது. கண்கள் தானே சுழன்றன திசையெங்கும். ஒன்றும் துலங்க வில்லை. அருகே வடக்குப் பக்கத்தி லிருந்த தென்னஞ் சோலையை நோக்கிய வண்ணமாய்ச் செவி மடுத்தேன். மீண்டும் ஆடவன் பேசினுன்.

"பொழுது போகுது" என்ருன்.

"என்னை எது செய்யச் சொல் கிறீர்கள்?" இது பெண்ணின் குரல்.

எனக்குப் பயம் அதிகரித்தது· ஆணும் பெண்ணும் தனிமையில் மறைவிடத்தில் நின்று பேசிக்கொள் கிருர்களே; அவர்களுக்கு எக்கெடு தியும் வரக்கூடாதே என்பதுதான் என் மனக்கவலை.

"நீ சொல்வதுபோல சென்ருல் எல்லோருக்கும் ஏளனமாய் போயிடும். எனக்கும் உனக்கும் நிம்மதி இருக்காது." அமைதியாகப் பேசினுன் ஆடவன்.

இதைக் கேட்டவுடன் தெளிவாகி யது. காதலர்கள் சந்திப்பு என்பதை உணர்ந்தேன். உள்ளத்தால் ஒன்றிய இவர்கள் வெளி உலகத்தால், தொந் தரவில் இருக்கின்றனர் என்பதே! மீண்டும் அவர்களது பேச்சில் கவனம் கொண்டேன்.

"அத்தான், எங்க அப்பா கொன்று போடுவேன்னு எச்சரிக்கை செய் திருக்காரு" என்ருள்.

"நாம் இருவரும் வெளி ஊருக்குப் போய்விடலாம். ஆனுல் ஊரில் உள்ளவர்கள் நம்மைப் பேடி என் பார்கள். மேலும் நாம் தலைகாட்ட முடியுமா? யோசித்துப் பார். ஏராள மான தொந்தரவுகள் வரும். எனது நிலங்களை யார் பயிரிடுவது?"

"ஆமாம்; அதுவும் சரிதான். ஒரே ஊரில் இருப்பதனுல்தானே இவ்வித மான 'சந்திப்பு' தொல்லைகள் சூழ்ந்த தாக இருக்கிறது. நீங்கள் வேறு ஊருக்குப் போய்விட்டால்..."

பெண், பேதை என்பதை உணர்த் தினுள்.

"வெளியூர் செல்வதனுல் தீர்ந் திடும் காரியமா?" அவன் சொன் னுன்.

"வேறு வழி இல்லையே"

"காலம் நம்மை நோக்கி வந்து கொண்டிருக்கிறது. இப்படிப்பட்ட மன ஒருமை கொண்டவர்களை காத லர்கள் எனப் பெயர்சூட்டி விடுவத னுல்; காதல் என்பது ஒருவிதமான உள்ளக் கோளாறு, இது கூடாது என்று உனது பெற்றேர்கள் இவ் வளவு கொடுமையாக எண்ணுகிருர் கள். உலகத்தின் செய்கைமாற்றம் அவர்களை என்ருவது ஓர் நாள் பாடம் புகட்டும். அப்போதாவது அவர்கள் சென்ற காலத்தில் தாங்கள் நடந்துகொண்ட ஆங்காரப் போக்கையும், ஆர்ப்பாட்டச் செயல் களையும் கண்டு மெய்யும் உள்ளமும் நோவர்."

அந்தக் காதலன் கொஞ்சம் கற்ற வன் என்பதை என்னுல் உணர முடிந்தது

"வேறு ஒருவருக்கு மணம் முடிக்க ஏற்பாடு நடக்கும் எனத் தெரியுது" அந்தப் பெண் சொன்னது.

"முருகு நேரில் வந்து கேட்டால் என்ன செய்வார்?" அவன் கேட் டான். அபிப்ராயங்கள் பலவிருப்பி னும் ஆண்மை தவருத காதலன் என்பதை உணர்ந்தேன்.

"பிடித்தால்தான் போச்சு. பிடிக்க வில்லையெனில்......" பெண் மனம் படபடவென அடித்துக்கொண்டே கூறியது.

"உண்மையில் நான் உன்னை விரும்புவது உன் தந்தைக்குத் தெரிந் திருந்தால் நிச்சயமாக என்னை அணுகியிருப்பார். இதுவரை அறி குறியே இல்லை." அவன் சொன் னுன்.

"கடைசியாகச் சொல்லுங்கள்· நேரமாகுது. சந்தையிலிருந்து தந்தையும் தாயும் வந்திடுவர்" நேர் மையான கள்ளத்தனம் கொண்ட காதலி என்பதை அறிந்தேன்.

"கடைசியாக! வாழ்வு அல்லது சாவு! உன்னுடன் நான்! என்னுடன் நீ! இல்லையெனில் உலகவாழ்க்கைத் துறவுதான்! மரண உலகினில் அமைதியாக வாழ்வோம்! நான் அடிக்கடி வரமாட்டேன். போய்வா" அவள் கைகளை முத்தமிட்டு விடை தந்தான்.

எண்ணங்களையும் உள்ளத்தின் பிடிப்பையும் பரிமாறிக்கொண்ட காதலர்கள் உலகத்தின் கண்களில் அவநம்பிக்கை வளர்ந்திருப்பதை கண்டனர். ஆகையால்; வாழ்வின் ஆரம்பத்தைத் தொடங்கக்கூடியவர் கள் முடிவின் முடியில் நின்று வாழ் வுக்கு முடிச்சுப்போட்டனர். புனித மானது என்பார்கள் காதலை; புண் கையைவிடக் கொடுமை நேர்ந்த தாகிவிட்டது. இதில் யார் அமைதி பெற்றுர்!

தென்றல் இதமாக என்னை முத்த மிட்டுச் சென்றுகொண்டிருந்தது. இந்தத் தென்றலின் இனிமையில், அதுவும் வெள்ளி நிலாவின் பவனி யில், ஒரு காதலியும் காதலனும் கூடுகின்ற வேளையில் அவர்கள் உள்ளம் குலாவும் இன்பந்தான் என்னே! அந்தச் சீலம் கொண்ட மகிழ்வுக்கு, இந்த உலகின் கண் வேறெந்த இன்பமும் ஈடாகுமா? அப்படிப்பட்ட மகிழ்ச்சிக்குரியவர் கள் மனத்தில் பயமும், கொந்தளிப் பும், நிறைந்து வெளி உலவுக்கு அடங்கி ஒடுங்கி வாழ்வதுதான் என்ன முறையோ? இயற்கை இன் பம் அவர்களுக்கு எவ்வளவு கொடிது! அமைதிக்கு இங்கு தானே சமாதி! மனிதன் நன் மைக்கெல்லாம் முட்டுக்கட்டை போடுவது ஏனே? அறியாமையும், நம்பிக்கையின்மையுந்தானே!

இதையெலாம் எண்ணிக் கொண்டு ஏதோ முற்றும் துறந்தவ னின் முழுநிலவுப் பவனிபோல, அந்த இள நிலவினில் வெகுதூரம் வந்துவிட்டேன்! மணி ஏழுக்கு விரைந்துகொண்டிருந்தது. அதன் பணி தடையின்றி நடந்தது. என் நடையை மடக்கினேன். என் உள் ளத்தில் எத்தனையோ நிகழ்ச்சிகள் கோர்வை கோர்வையாக இருந்து கொண்டு என்னைப் பார்த்துச் சிரித் தன. எனது நடையின் வேகம் கூடியது. பக்கத்து வாய்க்கால் களின் தண்ணீர் ஓட்டம் மிக அமைதியாக இருந்தது.

வீடுகள் நிறைந்த பகுதிக்குள் நுழைந்தேன் வெட்டவெளிச் சாலை யினின்று நீங்கி. அப்பொழுது......

"ஐயா ஆத்தாளை அடிக்காதீங்க" என்கிற குரல் கேட்டது.

இது இராமநாதபுரம் மாவட்டத் துப் பேச்சு என்பதை உணர்ந்தேன். குழந்தையின் குரலிது. கொடுமை யாக எனக்குத்தோன்றியது. இந்தக் காரியம் நடந்த இடம் ஓர் குடிசை. நான் கொஞ்சம் பயந்தவனுகையால் போகத் தயங்கினேன். அண்டை வீட்டில் உள்ளவன், அடிவிழும் கோணத்தை விமர்சித்துக்கொண் டும் மனைவியிடம் மளமளவென பேசிக்கொண்டும் இருந்தானேதவிர, விலக்கவோ, தடுக்கவோ செல்ல வில்லை.

மீண்டும் பெண்ணின் அழுகுரல் கேட்டவண்ணமிருந்தது.

மனைவியின் கூந்தலைக் கையாலே சேர்த்துப்பிடித்து கடுகடுப்பாக எதையோ கூறிக்கொண்டிருந்தான்!

ஏனோ இந்தப் பண்பற்ற ஊடல் எனப் பரிகசித்தேன்! அவர்கள் மயிர்பிடிச் சண்டைக்கும் கூச்சலுக்கும் காரணம் பணமே! கணவனும் மனைவியும் கீரியும் பாம்புமானது பணப்பித்தின் வெறியாலே! கணவன் வைத்துச் சென்றதை மனைவி மகவுக்கு பண்டம் வாங்க எடுத்தாளாம். இதற்குத்தான் இத்தனை வெகுமதியும் அவளுக்கு. 'வேலைக்குப் போகாமல் வீட்டிலிருந்து தின்னவா பார்க்கிறே!' அவனது கடைசி முழக்கம். கடுகடுப்பாக வெளியே வந்தான். அந்தக் கனத்த உடலுடைய கணவன்.

எனது நெஞ்சம் வேதனைப்பட்டது. கணவன் சேமித்ததில் மனைவிக்குப் பங்கில்லையா? என்ன கொடுமை? உயிருக்கும் உயிரான வள். சுதந்தரமாகச் செலவு செய்தாள். அந்த உரிமை அவளுக்குக் கிடையாதா? மனைவி என்றஙில்லை உள்ளவர்களுக்கெல்லாம் அந்த உரிமை உண்டாயிற்றே? பரிதாபம்! அந்தப்பழியை மீண்டும் செய்வானா? மனிதரெல்லாம் தாம் செய்கின்ற வைகளை தீர ஆலோசிப்பதே கிடையாதா? என் இதயம் அலைந்தது. தவித்தது. யாரைப்பார்த்தாலும் களங்கம் நிறைந்தவர்களாக இருக்கின்றனர். அமைதியான யாருமே இல்லையா? என்னையே நான் கேட்டேன். பதில் இல்லை. உலகிலிருந்து பதில் வந்ததா? அதுவும் இல்லை! பயங்கரமான உலகம் என்று சொல்லியபடி வந்துகொண்டிருந்தேன்.

எனக்கு முன்னால் பயங்கரமான இரைச்சலுடன், மலையிலிருந்து யானை உருள்வதுபோல ஓர் கார் வந்துகொண்டிருந்தது. உலகம் இதைப்போலப் பயங்கரமானது என்பதை அது காட்டிவிட்டுச் சென்றது. திடீரெனப் பயங்கர ஒலியோடு நின்றது. அதன்பின்னே மரணத்தோடு ஓர்நாய் போராடிக்கொண்டிருந்தது. நாயைக் கொன்றுவிட்டு நாகரிகமாய்ப் பறந்துசென்றான் அந்தச் சுகவாசி. உல்லாசக் காரில் உலவுபவர்களின் உண்மை நெஞ்சை என்னால் அந்நேரம் உணர முடிந்தது.

என் சிதறிய உள்ளத்தில் மேலும் சிறுகல் விழுந்தது. அமைதிக்குக் களங்கம் வந்துகொண்டேயிருந்தது. அந்தக் காரில் சென்றவனது மன அமைதி எப்படியிருக்கும்? இதையெல்லாம் எண்ணிக் கண்ணீர்விடுவானா? தன் உள்ளத்தை மன்னிக்கும்படியாக. மேலும் நடந்து வந்தேன்.

அமைதியற்ற உலகவாழ்வை யார்தான் விரும்புவர்! மனச்சுமை அதிகரித்தது. மானிட வாழ்வின் அனுபவங்கள் மிகக் கடுமைநிறைந்தவை. புளித்த நெஞ்சுடையவனுன என் காதுகள்; கொட்டுமேளம், வாத்தியம் இவைகளின் ஒலியைக் கேட்டன!

கொஞ்சம் தொலைவில் அந்தச் சாலையின் முழு அளவையும் அடைத்துக்கொண்டு ஒரு கூட்டம் வாத்தியங்கள் முழங்க வந்தவண்ணமாயிருந்தது. எனக்கு ஒன்றும் புரியவில்லை. ஊரில் ஒருவிசேடமும் இல்லையே! என் மனத்துள் ஏதோ புதிது புதிதாகச் சிந்தனை தோன்றியது.

எனக்கு எதிர்நோக்காக வந்து கொண்டிருந்த அந்தக் கூட்டம் காவலர்களின் அணிவகுப்பை முன்னிட்டு வந்தது. கையிலும் தலையிலும் விளக்குகள் ஏந்தியவர்களும் வந்தனர். காவலர்களின் காலொலி ஒன்றுபோல் தரையிற்பட்டன! இது வாத்திய இசைக்கும், மேளத்தின் ஒலிக்கும், மிகவும் இனிமையாக இருந்தது. ஊடே மணியோசையும் கேட்டது!

நான் அக்கூட்டத்தை நெருங்க நெருங்க அழுகையொலியும் சிறிது கேட்டது. அலங்கரிக்கப்பட்ட பல்லக்கு ஒன்று அணிவகுப்புக்குப் பின்னால் மணியோசையுடனும், அழுகையுடனும் வந்துகொண்டிருந்தது. என் நெஞ்சம் 'தீகீர்' என அடித்துக் கொண்டது. நான் கூட்டத்துள் புகுந்தேன். செய்தியைக் கேட்டேன் காவலர் ஒருவர் இறந்துவிட்டாராம் அவர் பணியில் இருக்கும்போதே! இறுதி மரியாதை அக்காவலருக்கு! இதுதான்!

வெடிகுண்டுகள் முழங்க, மேளம் ஒலிக்க, வாத்தியம் இசைக்க, வாழ்த்தாத கையெலாம் வாழ்த்த, வளையுடையாள் ஒருத்தி வளைகழற்ற, வாழ்வை நீத்துப்போன காவலரின் சவம் அடக்கம் செய்யப்பட்டது. அந்தோ! அவரது மனைவி ஓர் இளம் பெண். மணமாகி மாதம் ஐந்துகூட முடியவில்லை, புது வாழ்வு தொடங்கியவர் பலத்தைவிட்டே ஏகினர்! புது மனைவி செங்குருதி வடித்தாள்! பலன் எங்கேயுண்டு?

ஊரெல்லாம் பேசினர் அந்த ஊர்க் காவலரைப்பற்றி! இன்னருக்குக் கிடைத்த சாவு யாருக்குக் கிடைக்குமென்று! என்நெஞ்சையும் கரைத்துவிட்ட காவலர் அமைதியுடன் மாண்டாரா? அவரது இளம் மனைவிக்கு இனிமேல் அமைதிதான் உண்டா?

நெஞ்சில் மீண்டும் பாரம் அதிகமாகியது. அந்தப் பெண்நல்லாள் வாழ்வில் எதைத்தான் நடத்திக் காட்டமுடியும்! இளமையின் வாழ்வு இப்படியா கழியவேண்டும்? அமைதியாக வாழ அவள் நெஞ்சம் இணையுமா? நீங்காத நினைவாய் என்னெஞ்சை அரித்தது. உலகில் யாருக்குத்தான் அமைதி. நிச்சயமாகக் கூறலாம் எவருக்கும் இல்லையென்று! நான் சென்ற வழியிலும், வந்த வழியிலும் கண்டன வெலாம் கனவா? இல்லை. நினைவா? என்று எனக்கே ஐயம் தட்டுப் பட்டது.

பொதுநோக்காக இந்த உலகத்தைக் கவனித்தேன். உருண்டை வடிவமான பூமியின் ஒவ்வொரு திசையையும் ஆராய்ந்தேன். மனக் கண்ணிட்டு மாசற்ற முறையில் விசாரணை செய்தேன். அங்கெலாம் அமைதிகொண்டோர் ஒருவரையும் காணேன்.

எங்கு நோக்கிடினும் போட்டிகள்! பொறாமை எனும் கூற்றங்களின் ஆட்சிகள்! மனத்தாலே தாங்கமுடியாத கண்டனங்கள் எவ்வளவோ! குற்றம் நிறைந்த மனிதர்களைத்தான் பார்த்தேன். குறைகண்ட மானிடரைக் கண்டேன். சுகமற்ற மக்களைத்தான் நோக்கும் இல்லமெங்கும் கண்டேன். எல்லாமே அமைதியில் கல்இட்டாற்போல என்னைக் கவ்வியது.

என் கால்கள் வீட்டு வழியை நோக்கி ஊன்றியது. குறுகிய தெருவில் குழிவீழ்ந்த இடங்களில் மெதுவாக கால் வைத்துச் சென்றேன். ஆனால், அந்தத் தெருவில் திம் திம்மென்று மக்கள் கூச்சலிட்டு ஓடும் ஒலி என் காதில் வீழ்ந்தது. வேகமாக இதயத்தின் முன் அடித்தது. இன்னதுதான் நடக்கிறது என்ற தெளிவு எனக்கு இல்லை. வேகமாக நடந்தேன். அந்தச் சாலையில் எரிந்துகொண்டிருந்த மண்ணெண்ணெய் விளக்கடியில் ஓடிச் சென்ற மக்களெல்லாம் நிறைந்திருந்தனர். ஊடே ஒருவன் நின்று கொண்டு இதைத்தான சொன்னன்,

பதிவு எண். எம். 4642 தொலைபேசி எண்.... } அலுவலகம் 15 இல்லம் ...118

இலங்கையில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது.

'நாகப்பட்டிணத்தில் புயல்வீசத் தொடங்கிவிட்டதாம்!'

பட்டுக்கோட்டையை நோக்கி விரைகின்றதாம் புயல்!

எல்லோரும் தக்க பாதுகாப்பில் இருந்து கொள்ளவும்!

எங்குதான் அமைதி நிலைத்தது? என் இதயம் உருவாக்கிய கேள்வியைக் கடைசியாக உறுதிப்படுத்தியது வரப்போகின்ற கோரப் புயலின் பறைச் செய்தி.

இந்தச் செய்தியைக் கேட்ட மக்கள் தம் இல்லம் நோக்கி நடந்தனரா? இல்லை; ஓட்டமாய் ஓடினர், குழப்பமான இரைச்சலுடன்! கேடுகள் நிறைந்த உலக வாழ்வில் அமைதியே இல்லை. கூறிக்கொண்டே ஓடிவந்துகொண்டிருந்தேன். என் காற்றடங்கள் அமைதி அமைதி என்று தவித்தது. அமைதியெனும் மாமருந்தைத் தரும் ஆற்றல் எவனுக்குத்தான் உண்டு?

என் இல்லம் தென்னங்கீற்றால் வேயப்பட்டது. அதை நோக்கித்தான் நோகும் மனத்துடன் ஓடினேன். என் மனைவியையும் எனது இரண்டு குழந்தைகளும் அங்குதான் இருந்தனர். என் மனக் கலக்கமெல்லாம் அவர்கள்மேலே தான். இங்கே என் சுயநலம் பளிச்சிட்டது. எனது மனைவிக்காகவும் பிள்ளைகட்காகவும் நான் இரங்கினேன். இந்த உலகத்துக்காக யார் இரங்குவர்? வளைவுகளும், சந்துகளும் பல கடந்து என் வீட்டின் வாயிலில் நின்றேன். புயலுக்கு முன் அமைதியல்லவா! அவ்வமைதி தான் என் வீட்டை அடைந்ததும் எனக்கு ஏற்பட்டது.

குழந்தைகள் உலகறியாது தூங்கிக்கொண்டிருந்தன! என் மனைவி என்னருகில் ஓடி வந்தாள்!

"செத்தால்தான் அமைதி" என்றாள்.

"செ! நீ என்ன சொல்றே?" நான் உற்றுக் கேட்டேன்.

"அதுதான் புயல் புயலுன்னு ஊரெல்லாம் கலங்கிக் கிடக்குதே! இதைவிட வேறே என்ன வேணும் அமைதிக்கு உலை வைக்க" அடித்துப் பேசினாள்.

"புயலைச் சொல்றியா?" சிந்தையெலாம் புயலின் உருவாய் ஊரை அழிப்பதாகக் கருதிக்கொண்டே அவளிடம் பேசினேன்.

"ஆமாம்; இப்ப போனாரே புண்ணியம் செஞ்சவரு. அவருக்கு இனிமே என்ன கவலை. யார் எப்படியிருந்தாத்தான் என்ன? ஒரே அமைதி. இது யாருக்குக் கிடைக்கும்!" எல்லாவற்றையும் வெறுத்தவள் போலப் பேசினாள்.

"எதைச் சொல்றே" என்றேன்.

"போலீஸ்காரர் பிணம் போனதைப் பார்க்கலே" என்றாள்.

அந்த போலீஸ்காரர்தான் அமைதி பெற்றவர் என்றாள்! செத்தால்தான் அமைதி என்றாள்!

சிந்தித்தோ சிந்திக்காமலோ சுருக்கமாகக் கூறிவிட்டாள். அம்மையால் துன்பப்படும் மனைவிக்கும், பிள்ளைகட்கும் அமைதி தர பாலத்துப் பாட்டாளி எண்ணினான். அவனுக்கே அமைதியில்லா வேளையில் அந்தத் தென்னஞ்சோலையிலே காதலன் காதலியிடம் மரண உலகில் அமைதி பெறுவோம் என்றான்! அத்தத் தடித்த கணவன் மனைவியின் செயலில் அமைதி கலைத்தான் அவளே அவன் கைகளில் சிக்கிப் பட்ட பாட்டை எண்ணி அமைதியிழந்தாள்! அந்த நாய் கூட இறந்து போதுதான் அமைதி பெற்றதோ?

குழம்பிய நிலையினனாக என் மனைவியருகில் நின்றிருந்தேன் நான் வாழ்க்கை வாழும்போதே அமைதி நாடினேன். ஆனால் என் மனைவி என்னையும் மிஞ்சியவளாய் 'செத்தால்தான் அமைதி' என்றாள்

ஆனாலும்; உயிரைக் காக்க மண் குடிசை நீங்கி மாடிவீட்டை நோக்கி மனம் எதையோ சுமந்துவர; மகனை நான் சுமக்க, மகளை மனைவி சுமக்க மன அமைதியின்றிச் சென்று கொண்டிருந்தேன்.

★

4-ம் பக்கத் தொடர்ச்சி

களின் உணர்ச்சிச் சிதறல்களில் சில இதோ:

'உண்மையின் பேர் தெய்வம்
என்போம்—அன்றி
ஓதிடும் தெய்வங்கள் பொய்யெனக்
கண்டோம்.'

'செத்த பிறகு சிவலோகம், வைகுந்தம்
சேர்ந்திடலா மென்றே எண்ணியிருப்பர்
பித்தமனிதர், அவர் சொல்லுஞ்சாத்திரம்
பேயுரையாமென்றிங் கூதேடா சங்கம்!'
'ஆயிரம் தெய்வங்கள் உண்டென்று தேடி
அலையும் அறிவிலிகாள்!—பல்
லாயிரம் வேதம்அறிவொன்றே தெய்வமுண்
டாமெனல் கேளீரோ?......'
'மெள்ளப் பல தெய்வம் கூட்டி வளர்த்து,
வெறுங்கதைகள் சேர்த்துப்—பல
கள்ளமதங்கள் பரப்புதற்கோர் மறை
காட்டவும் வல்லீரோ?

என்றெல்லாம், நந்தமிழில் வீர உரை செய்த அந்நாற் கவிஞர், பிறமொழிச் சொற்களைக் கலந்து, அந்தத் தெளிய நடையில் ஒரு தடையை உணர்த்தியிருப்பதை ஆங்காங்கே காண்கிறோம். என் செய்ய? குறையில்லாத முழுமை எங்கு கண்டோம் எனவே, நாம் நல்லதை உணர்வோம். சிறந்ததை போற்றுவோம் —அதன்வழி நடப்போம். தீயவைகளை ஒதுக்குவோம். வெற்றி வாழ்க்கையின் வழியைப் கூறிய பாரதிக்கு நம் மனதால் நன்றி கூறுவோம். 'தமிழ்க் கவிஞனே! தந்நலம் பேணா தகைமையாளனே! உன் துணிந்த மனதை நாங்கள் போற்றுகிறோம் உண்மைக்குத் தலைவணங்கும் உன் அடிச்சுவட்டில் நாங்களும் நடக்க எம்மாலான முயற்சிகள் மேற்கொள்ளுகிறோம். இன்றைய இளந் தமிழ் உள்ளங்கள், நெஞ்சார நன்றி கூறுகின்றன, உன் நல்லிதயத்திற்கு!

❋

காஞ்சிபுரம், 86, திருக்கச்சிநம்பி தெரு, "திராவிட நாடு" அச்சகத்தில்
ஆசிரியர் (உரிமையாளர்) சி. என். அண்ணாதுரையால் அச்சிட்டுப் வெளியிடப்படுகிறது.